Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -02 16-06-2005 வியாழக்கிழமை ஓசை 118



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12120)

## எதிர்க்கட்சி வரிசையில் ஆசனம் ஒதுக்குக; ஜே.வி.பி சபாநாயகருக்கு கடிதம்!

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தமக்கு எதிர்க்கட்சி வரிசையில் இடம் ஒதுக்குமாறு ஜே.வி.பி சபாநாயகர் வீ.ஜே. எம்.லொக்குபண்டாரவுக்கு அறிவித்துள்ளதாக ஜே.வி.பி. அமைச்சர் அனுரகுமாரதிசாநாயக்க தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் ஜே.வி.பி தனது முடிவு குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை நேற்றுமாலை கண்டியில் நடைபெற்ற ஜே.வி.பி. மாவட்ட மாநாட்டில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறுகையில்,

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பிற்கு கைச்சாத்திடுவதை கைவிட்டுவிட்டதாக நேற்று நள்ளிரவு 11.59இற்குள் அறிவிக்காதவிடத்து கூட்டணியரசு வியாழக்கிழமை (இன்று) ஆட்சியில் இருக்காது எனத் தெரிவித்திருந்தார்.

## உண்ணாவிரதமிருந்த தேரரை பொலிசார் நேற்று அகற்றினர்!

-வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்துவந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பரஅமிலதேரர் உண்ணாவிரத மேடையிலிருந்து பலவந்தமாக அப்புறப் படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பொலிசாரும், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும் இணைந்து இவரை அங்கிருந்து பலவந்தமாக அழைத்துச்சென்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சக பிக்குமாரின் வேண்டுகோளுக்கு அமையவே இவரைத் தாம் அங்கிருந்து அப்புறப்படுத்தி வைத்திய (12ஆம் பக்கம் பார்க்க)

# சனாதிபதியிடமிருந்து கோரிக்கைக்குப் பதிலில்லை

# ஆட்சியில் இருந்து வெளியேற ஜே.வி.பி முடிவு!

## இன்று அமைச்சர்கள் இராஜினாமா

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்பை கைவிடுவதற்கு ஜே.வி.பி விதித்த காலக்கெடு நேற்று நள்ளிரவு முடிவுற்ற நிலையில் சனாதிபதி சந்திரிகாவிடமிருந்து எதுவித பதிலும் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனையடுத்து அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. தமது கட்சி அமைச்சர்கள் நால்வரும், பிரதி அமைச்சர்கள் நால்வரும் இன்று பதவி விலகவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து இன்று முற்பகல் பத்து மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை முற்றாக எதிர்த்துவரும் ஜே.வி.பி. இது தொடர்பான நடவடிக்கைகளை கைவிடுவதற்கு நேற்று நள்ளிரவு வரையான கால அவகாசத்தை கடந்த பத்தாம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விடுத்திருந்தது.

அதற்கு இணங்காவிட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி புதிய கூட்டமைப்பை இன்று உருவாக்கப்போவதாகவும் அது அறிவித்திருந்தது.

இக்கால அவகாசத்தை நீடிக்கக் (12ஆம் பக்கம் பார்க்க)

-விமானப்படை உலங்குவானூர்தியில்-

## கேணல் சொர்ணம் திருமலை பயணம்!

(கிளிநொச்சி)

திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் நேற்றுக்காலை 9.00 மணியளவில் சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி மூலம் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பாறை கட்டளைத்தளபதி கேணல் பானு, கட்டளைத்தளபதிகளான கேணல் தீபன், கேணல் ஜெயம் மற்றும் தளபதிகள், போராளிகள் ஆகியோர் கேணல் சொர்ணத்தை வழியனுப்பி வைத்தனர். கிழக்கிலிருந்து வன்னிக்கு வந்த புலிகளின் தளபதிகளுக்கான உலங்குவானூர்தி வசதியை ஏற்படுத் (12ஆம் பக்கம் பார்க்க)

## வவு.வில் கிளைமோர் தாக்கு; இரண்டு பொலிசார் படுகாயம்!

(வுவுனியா)

வவுனியா மதவாச்சி பறையனாலங்குளம் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிசார் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.15 மணியளவில் 29 ஆம் மைல்கல் பகுதியில் இருந்த பொலிஸ் சோதனைச் சாவடி மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தினை அடுத்து அப்பகுதியில் படையினரால் தேடுதல் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (32)

## தமிழீழ நீதிநிர்வாகத்துறையின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை!

### நோர்வேயின் ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நீதிநிர்வாகத்துறையின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாக உள்ளதென கிளிநொச்சி வந்திருந்த நோர்வே நாட்டின் ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி பேராசிரியர் ஹாசன் சிமித் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் உள்ள தமிழீழ சட்டக் கல்லூரியில் தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தலைமை நீதியாளர் ஒப்பிலான், சட்டவாக்கப் பொறுப்பாளர் இசையமுதன் மற்றும் நீதியாளர்கள், சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழீழத்தில் நீதிநிர்வாகத்துறையின் செயற்பாடுகள் பற்றி கேட்டறிந்தார்.

இதன் பின்னர், நோர்வே நாட்டின் நீதிநிர்வாகச் செயற்பாடுகள் பற்றியும் நோர்வேயின் சட்டங்கள் வேறு நாடுகளின் சட்டங்களுடன் எவ்வாறு வேறுபட்டிருக்கிறது என்பது பற்றியும் கலந்துரையாடினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

- பௌத்த பேரினவாதிகளைக்கண்டித்து -

## சாவகச்சேரியில் உண்ணாவிரதம்; தேசியத்தலைவருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

(சாவகச்சேரி)

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கும் சுனாமி அனர்த்த நிவாரண பொதுக்கட்டமைப்புக்கு எதிராகவும், பௌத்த குருமார்களாலும், சிங்கள பேரினவாதிகளினாலும் நேற்று மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ் இன விரோத நடவடிக்கைகளைக்கண்டித்து யாழ். சாவகச்சேரியில் நேற்று உண்ணாவிரதப்போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற இக்கண்டன உண்ணாவிரதப்போராட்டத்தில் பலநூற்றுக் கணக்கானோர் காலை முதல் மாலை வரை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தனர்.

இவ் உண்ணாவிரதப்போராட்டம் தென்மராட்சி வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.இதன் முடிவில் தமிழ் மக்கள் சார்பான மன உணர்வுகளை வெளிப்படுத்தி (12ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனை செய்த "இது இந்துமதம்" நூலின் ஆசிரியர் "சாமிஜி" எழுதிய புதிய புத்தகம் "கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்" விலை ரூபா 80/=

பரணன் 138 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.தொலைபேசி-2222365 (5381)

### தவறிவிட்டது

3சிறி 3178 எனும் இலக்க முடைய கார் உறுதிப்பத்திரம் மற்றும் சில ஆவணங்கள் என்பன கிளி. வைத்தியசாலைக்கும் சிங்கள மகாவித்தியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றார்.(6273)

### 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ்,சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம் டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்:- யாழ். ஒளி,K.S.R PHOTOS இல. 05, கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6272)

### சிங்கள மொழி வகுப்பு

ஆரம்பம்: 16.06.2005 (வியாழக்கிழமை) பி.ப 5.00 மணி. வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் தினங்களில் 5.00-6.00 மணி வரை நடைபெறும். வேலை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். நிலவு கணனித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (6268)

### விற்பனையாகின்றது

கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி 2006இற்கான விண்ணப்பப் படிவம், O/L விண்ணப்படிவம் என்பன குயிலன் புத்தகசாலையில் விற்பனையாகின்றது. (சி.12251)

---

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
## CENTER FOR HEALTH CARE

Reg No.L-85305

### Psychosocial Project Manager

Excellent opportunity for enthusiastic, energetic and competent project managers. Several opportunities to travel around Sri lanka with very attractive salary and benefits

Candidates

1. must have at least 3 passes in A/l
2. must be able to communicate (written& spoken) in English
3. must be computer literate and have experience in MS Office.
4. must be able to network with I/NGOs & government psychiatrists
5. must have previous experience in preparing project proposals
6. must be a good team player.
7. working experience in the public/ private health sector would be an advantage (Public health inspector, Medical Nurse or Psychosocial health worker backgrounds would be preferrd)
8. awareness of or working experience in MS project would be an advantage.
9. interests in sports would be an advantage.

please send your Curriculum Vitae (CV) to the following address before 30 June 2005.

Head Office,
Centre for Health Care,
A9 Road,
Kilinochchi,
Sri Lanka.

(சி.12212)

---

## காணி விற்பனைக்குண்டு

கனகபுரம் 104 இலக்கத்தில் இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் கனகபுரம், 11ஆம் பண்ணை, 104, விலைவிபரம் நேரில் பேசித் தீர்க்கப்படும் (6276)

---

## சாவு அறிவித்தல்



### கந்தையா செல்லையா

சுன்னாகம் கிழக்கு சுன்னாத்தைப் பிறப்பிடமாகவும், படித்த வாலிபர் முன்னோடித் திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராக 1958 ஆம் ஆண்டு தொடக்கம் இல3,1ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சியில் வசித்து வந்த பிறதர் செல்லையா என அழைக்கப்படும் கந்தையா செல்லையா 15-06-2005 புதன் அதிகாலை கொழும்பில் காலமானார். அன்னார். காலம்சென்ற கந்தையா , செல்லாச்சிப்பிள்ளையின் அன்பு மகனும், மாதகலைச் சேர்ந்த வினாசித்தம்பி,லட்சுமியின் அன்பு மருமகனும், பிரணவ சோதியின் அன்புக் கணவரும், காலம் சென்ற இராமாசிப்பிள்ளை, காசிநாதர், சின்னத்துரை, அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோணேஸ்வரன், செல்வநாயகி, தவநாயகி, கோகிலேஸ்வரன், தவனேஸ்வரன், ராஜநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயனி, ரவிச்சந்திரன், விசியகுமார், சத்தியா, யுவமகாதேவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரிகைகள் இன்று வியாழக்கிழமை (16-06-2005) கனகபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கனகபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தகவல்:-

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(6275)

---

unicef

# கண்ணிவெடி விழிப்புணர்வு

வெண்புறா WHITE PIGEON

அன்பார்ந்த மக்களே!

வன்னியின் பெரும்பாலான பிரதேசங்களில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களின் ஆக்கிரமிப்பினால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதனை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். இவ்விதமான ஆபத்துக்களில் இருந்து எமது மக்களைக் காப்பாற்றுவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ள நாம் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அப்படியிருந்தும் அடிக்கடி இடம்பெறும் வெடிவிபத்துக்களையும், அதனால் ஏற்படும் அனர்த்தங்களையும் நிறுத்தமுடியாததையிட்டு நாம் பெரிதும் கவலையடைகின்றோம். காலத்திற்குக் காலம் நாம் விடுக்கும் வேண்டுகோளினை அலட்சியப்படுத்துவதும், தங்களினதும், தங்கள் குடும்பத்தினதும் எதிர்காலத்தினை எண்ணிப் பார்க்காதவர்களது கவனக்குறைவினாலுமே இவ்வாறான பேரழிவுகள் நடைபெறுகின்றன. அன்பானவர்களே உங்களினதும், உங்கள் குடும்பத்தினரதும் சுபீட்சமான எதிர்காலத்தினை எண்ணிப்பார்த்து வெடிபொருட்களின் ஆக்கிரமிப்பிலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு கீழ்க்காணும் குறைந்தபட்சமான அறிவுரைகளை ஏற்று நடக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- கண்ணிவெடிகள் சம்பந்தமான சகல கருத்தரங்குகளிலும் தவறாது பங்கு கொள்ள வேண்டும்.
- கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் வெண்புறா நிறுவனம் அல்லது கண்ணிவெடி அகற்றும் பிரிவினருடன் பரிமாறிக் கொள்ள வேண்டும்.
- யுத்தம் இல்லையென்றால் கண்ணிவெடிகள் இல்லையென்று அர்த்தமல்ல. கண்ணிவெடிகளின் வயது கணிக்கப்படவில்லை.
- எமது மண்ணில் இலட்சக்கணக்கிலான கண்ணிவெடிகளும், வெடிபொருட்களும் மறைந்து கிடக்கின்றன. அவை எந்நேரமும் வெடித்து எம்மைக் கொல்லலாம்,முடமாக்கலாம்.
- குடியிருக்கும் கிராமத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக பூரணமாக அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- காணிகளைத் துப்புரவு செய்யும்போதும் ,தீயிடும்போதும், குழிகளை வெட்டும்போதும், மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.
- தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குள் எக்காரணம் கொண்டும் உட்செல்லக்கூடாது
- ஐமிச்சமான பொருட்கள் எதனையாவது காண நேர்ந்தால் அவற்றைத் தொடாமல் இருப்பதுடன், அவை சம்பந்தமான தகவல்களை உரியவர்களுக்கு அறியத்தர வேண்டும்.
- உங்கள் குடும்பத்தில் ஒருவர்தன்னும் பாதிக்கப்பட்டால் உங்கள் முழுக்குடும்பமுமே பாதிப்புக்குள்ளாகிறது என்பதை மறக்கவேண்டாம்.

**மேற்குறித்த அறிவுரைகளை மனதில் இருத்தி உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளும் திறனை அடைய வேண்டும் என்பதே எங்கள் உன்னத பணிகளின் குறிக்கோளாகும்.**

வெண்புறா நிறுவனம், வன்னி.

(6274)

# கலிபோர்ணியாவில் நிலநடுக்கம்
# சுனாமி எச்சரிக்கையால் பரபரப்பு

(சான்பிரான்ஸ்சிஸ்கோ)

**அமெரிக்காவின் கலிபோர்ணியா மாகாணத்தின் வடக்குப் பகுதியில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந் நில நடுக்கம் ரிச்டர் அளவில் ஏழு புள்ளியாகப் பதிவானது.**

இந்த நிலநடுக்கம் சான்பிரான்ஸ்சிஸ்கோ, ஒரிகான், கிரசென்ட் நகரம் உட்பட பல்வேறு பகுதிகளில் உணரப்பட்டதாகவும். வீடுகள் இலேசாக அதிர்ந்ததாகவும். வீட்டில் இருந்த பொருட்கள் உருண்டு விழுந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமிப் பேரலைகள் வரக்கூடும் என்று கலிபோர்ணியாவில் உள்ள சுனாமி எச்சரிக்கை மையம் அபாயஅறிவிப்பு வெளியிட்டது. கலிபோர்ணியா மட்டுமன்றி மெக்சிக்கோ, கனடா வரையுள்ள பகுதிகளையும் சுனாமிப் பேரலைகள் தாக்கும் என்று எச்சரிக்கை விடப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவசரகால பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி ஓடினார்கள். கலிபோர்ணியா முழுவதும் பெரும் பரபரப்பும், பீதியும் ஏற்பட்டது. ஆனால் சிறிது நேரத்தில் 'சுனாமி' எச்சரிக்கை அறிவிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. சுனாமி அலைகள் எதுவும் கலிபோர்ணியாவைத் தாக்கவில்லை. ஆனால் நிலநடுக்கத்துக்கு பிந்திய அதிர்வுகள் தொடர்ந்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.



ஈராக்கில் தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க யுத்த டாங்கி ஒன்று.

## அவுஸ்.பாராளுமன்றில் பரபரப்பு

அவுஸ்திரேலியாவின் தேசிய பாராளுமன்ற கட்டடத்தில் வெள்ளை நிறத்தூள் அடங்கிய பக்கெட் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அது நோயைப் பரப்பும் கிருமிகள் அடங்கிய தூளாக இருக்கலாம் என்ற பீதி ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து பாராளுமன்ற கட்டடத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அங்குள்ளவர்கள் வெளியேற்றப்பட்டு கட்டடத்தின் முக்கிய அறைகள் மூடப்பட்டன. அந்த மர்மத் தூளை எடுத்து சோதனைக் கூடத்துக்கு அனுப்பி வைத்தனர். சோதனையில் அந்தத் தூள் அபாயகரமானது அல்ல என்பது தெரியவந்தது.



பாக்தாத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய ஆர்.பி.ஜீ தாக்குதலில் எரியும் அமெரிக்க ட்ரக்வண்டியையும் அவ்விடத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள ஈராக்கியப் படை வீரரையும் படங்களில் காணலாம்.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்; 29 பேர் உயிரிழப்பு;பலர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் நடந்த இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 29 பேர் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர்.


ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் கடும் கண்காணிப்பில் ஈடுப்பட்டுள்ள போதிலும் தீவிரவாதிகளின் வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்கிறது. வடக்கு ஈராக்கில் கிர்குக் நகர வங்கியில் மாதச்சம்பளம் வாங்க ஏராளமான அரச ஊழியர்கள் வரிசையில் நேற்று முன்தினம் நின்றிருந்தனர். அவர்களிடையே நின்றிருந்த தீவிரவாதி ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டைத் திடீரென வெடிக்கச் செய்தார்.இச்சம்பவத்தில் பத்தொன்பது பேர் பலியாகினர்.53பேர் காயமடைந்தனர். அதே போல் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலில் ஈராக்கியர்கள் பத்துப் பேர் பலியாகினர். ஏழு பேர் காயமடைந்தனர்.

சதாம் ஹுசைன் ஆட்சியில் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த குர்திஷ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. மூன்று மாகாணங்களை உள்ளடக்கிய குர்திஷ்சுயாட்சிப் பகுதியின் முதல் அதிபராக குர்திஷ் தலைவர் மசூத் பர்சானி நேற்று முன்தினம் பதவியேற்றார். அவர் பதவியேற்பதற்கு சிறிது நேரத்திற்கு முன் வங்கியில் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



பாரிஸில் நடைபெறும் உலக வர்த்தககம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டுள்ள பிரான்ஸ் சனாதிபதி ஜக்ஸ் ஷராக்கும் ஐ.நா.செயலர் கோபி அனானும் உரையாடுவதை படத்தில் காணலாம்.

## செவ்வாய்க்கிரக பாறைக்கு "நாசா"வால் 'பொங்கல்' என பெயர் சூட்டப்பட்டது!



(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாறைக்கு "பொங்கல்" என்று தமிழ் பண்டிகையின் பெயரை நாசா வானவெளி ஆராய்ச்சி நிறுவனம் சூட்டி தமிழுக்கு பெருமை சேர்த்துள்ளது.

செவ்வாய்க்கிரகம் பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்காவின் 'நாசா' வானவெளி ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. நான்கு பேர் கொண்ட இந்த ஆராய்ச்சிக் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானி அமிதா கோஷ் உட்பட மைக்கேல் வியாட், ஜேம்ஸ் ரைஸ், நிக்கோலே சுல்ட்ஜ் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இவர்கள் கொல்கத்தாவில் தனியார் தொலைக்காட்சிக்கு தெரிவிக்கையில் செவ்வாய் கிரகத்தில் மூன்று பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் ஒன்றுக்கு இந்தியாவில் பழம் பெருமை வாய்ந்த கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய பல் கலைக்கழகமான 'நாலந்தா' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே "நாலந்தா" பல்கலைக்கழகம் உலகில் முதன் முதலாகத் தோன்றிய பல்கலைக்கழகம் என்ற பெயர் பெற்றது. இப்போது பீகார் என்று அழைக்கப்படும் அப்பகுதியில் அந்தப் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகின்றது. இந்தப் பல்கலைக்கழகம் உலக அளவில் கல்விஅளித்துப் பல மேதைகளை உருவாக்கியதாக வரலாறு கூறுகின்றது.

இன்னொரு பாறைக்கு இந்தியாவில் பெரும் சிறப்பு வாய்ந்த வைரமான 'கோகினூர்' பெயர் வைக்கப்பட்டுள்ளது.. மற்றொரு பாறைக்கு புகழ்பெற்ற தமிழ்ப்பண்டிகையான "பொங்கல்" 'என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் பெயர்கள் வைக்க 'நாசா' நிறுவனம் தீவிர ஆய்வுக்குப் பின்னர் அனுமதி அளித்துள்ளது.

## பூமியைப் போன்ற கிரகம் கண்டுபிடிப்பு ஆனால் உயிரினங்கள் வசிக்க முடியாது



(வோஷிங்டன்)

பூமியைப் போன்ற கிரகம்ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் உயிரினங்கள் வசிக்க முடியாத அளவுக்கு மிக,மிக வெப்பத்தைக் கொண்டது இந்தக்கிரகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பூமி சூரியனில் இருந்து ஒன்பது கோடியே 30 இலட்சம் மைல் தூரத்தில் உள்ளது. சூரியனைச் சுற்றி வரும் கிரகமான பூமி சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது.

பூமியைப் போன்ற கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர். சூரியக் குடும்பத்திற்கு அப்பாற்பட்டு கண்டுபிடித்த கிரகங்களிலேயே மிகச் சிறியது இதுதான் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

கலிபோர்ணியா பல்கலைக்கழக வானவெளி ஆராய்ச்சிப் பிரிவு பேராசிரியர் ஜியோபெரி மார்சி தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்தப் புதிய கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. தங்களது கண்டுபிடிப்பு பற்றிய விவரங்களை அவர்கள் ஆர்லிங்டன் நகரில் உள்ள தேசிய அறிவியல் மையத்திடம் ஒப்படைத்தனர்.

இந்தப் புதிய கிரகம் கிலிசி 876 என்ற அதன் தாய்க் கிரகத்தைச் சுற்றி வருகிறது. இந்த இரு கிரகங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 20 இலட்சம் மைல் தான் (பூமிக்கும், சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம் ஒன்பது கோடியே 30 இலட்சம் மைல் ஆகும்) இந்தக்கிரகம் பூமியைப் போல ஏழு மடங்கு பெரியதாகும்.

பூமியிலிருந்து 15 ஒளியாண்டு தூரத்தில் இந்த கிரகம் உள்ளது. பூமியைப்போல இந்தக் கிரகத்திலும் மலைகள் உள்ளன. ஆனால் உயிரினங்கள் வசிக்க முடியாத அளவுக்கு மிக மிக வெப்பமாக உள்ளதாம்.

## எனக்கு அன்பும் ஆதரவும் தந்த ரசிகர்களை மறக்க மாட்டேன்


**-ஜாக்சன்**



ஜாக்சன்

13 வயதுச் சிறுவனை பாலியல் பலாத்காரம் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் இருந்து மைக்கேல் ஜாக்சன் விடுவிக்கப்பட்டதையடுத்து, கடந்த நான்கு மாத மௌனத்தைக் கலைத்தார் மைக்கேல் ஜாக்சன்.

அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், தனக்கு ஆதரவும், அன்பும் அளித்து வந்த ரசிகர்களை ஒரு போதும் மறக்கமாட்டேன் எனத் தெரிவித்தார். மேலும் தனது குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகியோருக்கும் நன்றி சொல்கிறேன் என்றும் தெரிவித்தார்.




கடந்த மே.முதலாம் திகதி ஈராக்கில் கடத்தப்பட்டு ஜீன் 15 இல் விடுதலை செய்யப்பட்ட டக்ளஸ் வூட் என்ற அவுஸ்திரேலியரின் புகைப்படம்.

# இராணுவ ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து 21 வருடங்கள்;
# நிர்க்கதியாக வாழும் எமக்கு இயல்பு வாழ்வு எப்போது?

## -கொக்குளாய்,கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள் கேள்வி

(முல்லை)

**சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து இருபத்தொரு வருடங்கள் நிர்க்கதியாக வாழ்ந்து வரும் நாம் மீண்டும் எமது சொந்த இடங்களில் சென்று குடியமர்வது எப்போது என முல்லை மாவட்டத்தின் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமமக்கள் முல்லை.அரச அதிபரிடம் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

கடந்த திங்களன்று அரச செயலக முன் இடம்பெற்ற மறியல் போராட்டத்தின் இறுதியில் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

1984 ஆம் ஆண்டு எமது கிராமங்களை விட்டு இராணுவத்தால் வெளியேற்றப்பட்டு கிட்டத்தட்ட 21 வருடங்களாக இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றோம். சமாதான சூழ்நிலை ஏற்பட்டு இன்று வரையும் எமது கிராமங்களுக்கு போக முடியாது துன்பத்தில் வாழ்ந்து வரும் மக்களாகிய நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

*. எமது சொந்தக்கிராமங்களுக்குச்சென்று குடியிருப்பதற்கான வசதிகளை உடனடியாகச்செய்து தரவேண்டும்.

*. நாம் இடம் பெயர்ந்து பல கிராமங்களில் குடியிருந்து வருகின்றோம். இடம் பெயர்ந்து நிவாரணத்துடன் தங்கியிருக்கும் எமது மக்களுக்கான இருப்பிட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

*.எமக்குநிவாரணம் ஒழுங்காகக்கிடைப்பதில்லை. இன்று வரை 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதத்திற்கான நிவாரணம் பூரணமாக வழங்கப்படவில்லை. நிவாரணத்திற்கு வழங்குகின்ற பொருட்களில் தரமான பொருட்கள் வழங்கப்படுவதில்லை. கொக்குளாய் முகத்துவாரத்திலிருந்த சிங்கள மக்களுக்கு எதுவித அழிவும் ஏற்படாமல் இருந்த போதும் அம்மக்களை பதவியாவில் தற்காலிக குடியிருப்புக்களை அமைத்து பராமரித்து வந்துள்ளார்கள். அதேபோன்று எம் மக்களையும் பராமரித்து இவ் உதவிகளைச்செய்ய மறுக்கப்பட்டிருக்கின்றது.

*. எமது மக்களை அனாதரவற்றவர்களாக கவனிக்காது பலராலும் எம்மைப்புறக்கணித்து வருவதாலும் நாம் இனி மேலும் பொறுத்திருக்க முடியாது. ஆகவே எமது கிராமத்திற்கு உடனடியாக செல்வதற்கு ஒழுங்கு செய்து தருமாறும் அதற்கு தவறின் தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தங்களுக்கு மிகுந்த கவலையு டன் அறியத் தருகின்றோம் எனவும் அம்மகஜ ரில் குறிப் பிடப்பட்டுள்ளது. (20)

## முள்ளியவளை பூதன்வயலில் வீரமுரசு எழுச்சிநிகழ்வு

முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் கடந்த திங்களன்று வீரமுரசு நிகழ்வு ஆறுமுகத்தான் குளம் மாலை நேரக்கல்வி ஊரக வளர்ச்சிப்பணி ஆசிரியை தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முள்ளியவளை பிரதேசப்பொறுப்பாளர் முல்லைவீரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அக்கிராமத்திலுள்ள மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரினை ஏற்ற மலர்மாலையினையும் மாவீரர்களின் பெற்றோர்கள் அணிவித்தனர்.

இந்நிகழ்வில் கருத்துரைகளை இக்கிராம ஊரக வளர்ச்சிப்பணித்தலைவரும், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கனகரத்தினம் ஆற்றினார். நிகழ்வின் சிறப்புரையினை முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆற்றினார். (08)



பல வருட காலமாக செப்பனிடப்படாது உருக்குலைந்த நிலையில் இருந்த டி. 8 இரத்தினம் பண்ணை வீதி தற்போது செப் பனிடப்பட்டு வருவதனைப்படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# மூதூர் - குமாரபுரம் படுகொலை வழக்கு விசாரணை நவ. - 8 வரை ஒத்தி வைப்பு

## தடயப்பொருட்கள் அழிப்பு

(திருமலை)

மூதூர்-குமாரபுரம் படுகொலை வழக்கு விசாரணை நவம்பர் எட்டாம் திகதி ஆரம்பமாகும் என்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்தார்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே திகதி நிர்ணயிக்கப்பட்டது.

11.02.1996 ஆம் ஆண்டு கிளிவெட்டியில் நிலை கொண்டிருந்த படையினர் நடத்திய வெறியாட்டத்தின் போது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 24 தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 25 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக ஆரம்பத்தில் எட்டுப்படையினர். மீது சட்டமா அதிபர் கொலை, கொலை முயற்சி உட்பட 101 குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார். இவ்வழக்கில் 112 சாட்சிகள் சாட்சியமளிக்கவுள்ளனர்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஏழு எதிரிகள் ஆஜராகியிருந்தனர். ஏழாவது எதிரி இறந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்குத்தொடர்பாக எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக அரசாங்க இரசாயனப்பகுப்பாய்வாளரின் அறிக்கை பற்றி அரச வழக்கறிஞர் எஸ்.ஹலிம்டீன், மேல் நீதிமன்ற நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

குற்றம் புரிவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக்கூறப்படும் ஆயுதங்கள் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்கும் அறிக்கைக்குமாக அனுப்பப் பட்டிருந்தன. அரசாங்க இரசாயனப்பகுப்பாய்வாளர் அலுவலகத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் அவ் வாயுதங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டதாக அரச இரசாயன பகுப்பாய்வாளர் தற்போது அறிவித்துள்ளார். என்று அரச வழக்கறிஞர் ஹலிம்டீன் மேல் நீதிமன்ற நீதிபதியிடம் தெரிவித்தார்.

அத்தடயப்பொருட்கள் இல்லாவிடினும் கண்ணாற் கண்ட சாட்சிகள் இருப்பதால் அவர்களை வைத்துக்கொண்டு வழக்கு விசாரணையை ஆரம்பிக்கலாம் என்றும் அரச வழக்கறிஞர் ஹலிம்டீன் தெரிவித்தார்.

அதனையடுத்து விசாரணையை ஆரம்பிப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது. 112 சாட்சிகளில் முதலில் எட்டுச் சாட்சிகளை சாட்சியமளிக்க அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அச்சாட்சிகளுக்கு நவம்பர் எட்டாம் திகதி ஆஜராகும் படி அழைப்பாணை அனுப்புமாறு மேல் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் உத்தரவிட்டார். குமாரபுரம் படுகொலை வழக்கு 2002 ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றத்துக்குப்பாரப்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கது. (25)

# க.பொ.த உயர்தரப்பரீட்சை அமைதியாக நடைபெறுகின்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சை அமைதியாகநடைபெற்று வருவதாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 31 பரீட்சை நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. எல்லாமாக 5097 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றியுள்ளனர். இவர்களில் 3378 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் எனவும், 1719 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஏழு இணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது பரீட்சை எவ்வித அசம்பாவித சம்பவங்களுமின்றி நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# விசுவமடு தொட்டியடியில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டிச்சவாரிப்போட்டி

(வட்டக்கச்சி)

விசுவமடு தொட்டியடியில் புதிதாக அமைக்கப்பட்ட சவாரித்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு மணியளவில் தொட்டியடி நீர்ப்பாசனத் திணைக்களமும், சனசமூகநிலையங்களும் இணைந்து நடாத்தியபோட்டியில் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளாக மாட்டுவண்டிச்சவாரியும் மற்றும் கைக்கொடிச்சவாரியும் இடம்பெற்றது.

இப்போட்டியின் போது வெற்றியை தமதாக்கிய காளைச் சோடிகளுக்குரியவர்கள்விபரம் வருமாறு:-

அ.பிரிவில் முதலாம் இடம் மு.செந்தில்குமார், பிரமந்தனாறு, இரண்டாம் இடம், ந.கமல்ராஜ், பண்டதரிப்பு, மூன்றாம் இடம், செ.நேசன், புத்தூர்,

ஆ.பிரிவில் முதலாம் இடம் சி.பகிதரன் விசுவமடு, இரண்டாம் இடம்:-த.குகன் வட்டக்கச்சி, மூன்றாம் இடம் -க.சுஜிவன் தட்டுவன்கொட்டி.

இ.பிரிவில்:-முதலாமிடம் -இ.அப்பன் உடையார் கட்டு, இரண்டாமிடம், ம.தேவன் புளியம்பொக்கணை, மூன்றாமிடம் வே.பிரபாகரன்.முரசு மோட்டை.

ஈ.முதலாமி டம்- த.ஜெகன் விசுவமடு, இரண்டாமிடம் பா.ஜீசிதன் பூநகரி, மூன்றாமிடம் பா.முகுந்தன் மூங்கிலாறு.

கைக்கொடிச்சவாரியில் முதலாமிடம் வ.நித்தியானந்



தம் ஆகியோர் வெற்றியை தமதாக்கி பரிசில்களைத் தட்டிக்கொணடனர். அடுத்த சவாரி எதிர்வரும் 19ஆம் திகதி வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடை பெறவுள்ளது. (12)

# நிறுத்தலளவைக்கருவிகளுக்கு முத்திரையிட அழைப்பு

பளைப்பகுதியிலுள்ள பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக்கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு இன்றிலிருந்து எதிர்வரும் ... ஆம் திகதி வரை பளை வருவாய்ப்பகுதி ... கத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுத்தலளவைக்கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றை முத்திரையிட்டுக்கொள்ளுமாறு நிறுத்தலளவைப்பிரிவு வருவாய்ப் பகுதியினர் வேண்டிக்கொள்கின்றனர்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி குடாநாட்டில் பரவலாக வெகுசனப் போராட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடல் அனர்த்தம் தொடர்பான அரசு - புலிகள் பொதுக் கட்டமைப்பை விரைவுபடுத்தி ஏற்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்.குடாநாட்டில் பரவலாக வெகுசனப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை பொதுஅமைப்புக்கள் பலவும் முன்னெடுத்து வருகின்றன.**

தென்னிலங்கையில் பொதுக் கட்டமைப்பிற்கெதிரான கோஷங்கள் பலத்து வருகின்ற நிலையிலேயே வடபகுதியில் ஆதரவான கோஷங்கள் வலுத்து வருகின்றன.

இதன் முதற் கட்டமாக நேற்று புதன் கிழமை முதல் தென்மராட்சியின் வணிகர் கழகங்களின் ஏற்பாட்டில் மூன்று தினங்களாக தொடர்ச்சியான அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வடமராட்சி மற்றும் தீவகம் உள்ளிட்ட குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடற்றொழிலாளர் சங்கங்கள் உள்ளிட்ட பல பொது அமைப்புகளும் ஆதரவான போராட்டங்களை நடாத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (27)

# பாடசாலைகளின் சுகாதாரப்பிரச்சினையை போக்குவதற்கு யுனிசெவ் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகளை போக்குவதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர்பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் பாடசாலைகளில் நிலவுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளை இனம் கண்டு அது தொடர்பான விபரங்களைத் தமக்கு உடன் அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ். அரச செயலகத்தைக் கோரியுள்ளது.

இக்கோரிக்கைக்கேற்ப யாழ்-மாவட்டப் பாடசாலைகளில் நிலவி வரும் அடிப்படை சுகாதாரப் பிரச்சினைகளான மலசலகூட வசதி இன்மை, குடி நீர் வசதி இன்மை தொடர்பான விபரங்களை சேகரித்து அவற்றை உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

(33)

# காணியை துப்புரவாக்கியவர் மிதிவெடியில் சிக்குண்டார்

(தென்மராட்சி)

தென்மராட்சி மட்டுவில் பகுதியில் மிதிவெடி வெடித்தத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டுவில் பகுதியிலுள்ள காணியினை துப்புரவு செய்து கொண்டிருந்த போது வெடிக்காத நிலையில் புதைந்திருந்த மிதிவெடி வெடித்ததிலேயே இவர் படுகாயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவராசா (வயது -44) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (28)

# 1000 வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு இன்று முதற்கட்ட கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள 1000 வீட்டுத்திட்டத்தின் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவுகள் வழங்கும் வைபவம் இன்று யாழ். மாவட்ட அரச செயலக மண்டபத்தில் அரசாங்க அதிபர் கே. கணேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் பத்து மணியளவில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உலக வங்கியின் வடக்குக் கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

யுத்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கான வீடமைப்பிற்கான கொடுப்பனவில் முதற்கட்டக் கொடுப்பனவுகள் இந்நிகழ்வில் பயனாளிகளிடம் கையளிக்கப்படும்.

இதில் முற்றாக அழிவடைந்த வீடுகளை மீளக் கட்டுவதற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சேதமடைந்த வீடுகளை புனரமைக்க ஒரு இலட்சம் ரூபாவும் பயனாளிகளுக்கு வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிதி நான்கு கட்டங்களாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்க தாகும். (33)

# தென்மராட்சி கல்வி வலயத்திற்கு புதிய வாகனம் வழங்கப்பட்டது

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு புதிய வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. தென்மராட்சி வலயத்தின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் இந்த வாகனம் மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரிய ஆலோசகர்களாக இவ் வலயத்தில் அதிகளவு பெண்களே கடமையாற்றுகின்றனர். இதனால் இவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர்.

இதனை மாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கொண்டு வந்திருந்தார்.

இதன் அடிப்படையில் மாகாண கல்வி அமைச்சின் செயலரின் உத்தரவின் பேரில் அண்மையில் இக் கல்வி வலயத்திற்குப் புதிய வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது,

இந்த வாகனத்தினை மாகாணக் கல்வி அமைச்சின் ஆசிரியர் நியமனக் கிளையைச் சேர்ந்த கிருஷ்ண குமார் வழங்கி வைத்தார்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் உயர் மட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் உயர்மட்ட மாநாடு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் காலை 10.00 மணிக்கு இம்மாநாடு நடைபெறும். யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட, கோட்ட பிரதேச, ஊரக அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். மாறிவரும் அரசியல் இராணுவ சூழ் நிலையில் நடைபெறும் இம்மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருப்பதாக தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (28)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நான்கு கிராமங்கள் அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் மேற்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நான்கு கிரா மங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி வாழ முடியாது தற்காலிகமாக குடியேறி வாழ்ந்து வரும் மக்களை மையமாகக் கொண்டே நான்கு கிராமங்களும் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இக் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் இக் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சங்கானை மக்கள் வங்கியில் கள்ள நோட்டு பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் வைத்து 500 ரூபா கள்ள நோட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சேமிப்பில் இடுவதற்காக வாடிக்கையாளர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட பணத்திலேயே இந்தக் கள்ள நோட்டு கண்டு பிடிக்கப்பட்டன.

வாடிக்கையாளர் கொண்டு வந்த பணத்தை வங்கியின் பணம் எண்ணும் இயந்திரத்தில் இட்டு எண்ணும் போது இயந்திரம் இயங்க மறுத்தது. சந்தேகம் கொண்டு குறிப்பிட்ட பணத்தை எடுத்துப் பரீட்சித்த போது அது போலித்தாள் என அடையாளம் காணப்பட்டன.

இது தொடர்பாக சங்கானைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பணத்தை வங்கியில் வைப்புச் செய்ய வந்த நபர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# யாழ்.இல் தடுத்து வைக்கப்பட்டிருந்த சீன வியாபாரிகள் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

சந்தேகத்தின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு சீன வியாபாரிகளும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அவர்கள் கொழும்பு குடிவரவு, குடியகல்வு திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் .நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இந்த சீன நாட்டு வியாபாரிகள் கடவுச்சீட்டுகள் இன்மை மற்றும் சட்ட விதிகளுக்கு முரணாக யாழ்.நகரில் வியாபாரத்தில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கடந்த பத்தாம் திகதி கைது செய்யப்பட்டு யாழ்.மாவட்டநீதிபதி இ.த. விக்கினராஜாவின் உத்தரவின் பேரில் யாழ்.சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவ் ஆறு பேரும் தம்மை விடுதலை செய்யக்கோரியும் தமக்கு சிறைச் சாலையில் அச்சுறுத்தல்கள் உள்ளதாகவும் தெரிவித்தும் 13 ஆம் திகதி தொடக்கம் யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து இவ் ஆறு சீன வியாபாரிகளையும் உடனடியாக குடிவரவு, குடியகல்வுத் திணைக் களத்தினரிடம் ஒப்படைக்குமாறு மாவட்ட நீதிபதி விக்கினராஜா உத்தரவிட்டார். இவர்கள் உடனடியாக இராணுவ பாதுகாப்புடன் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (33,27)

# பாதிக்கப்பட்ட அதிபர் ஆசிரியர் விபரங்களை அனுப்பி வைக்கும் படி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளான அதிபர், ஆசிரியர் மற்றும் அலுவலர்களினது சேத விபரங்களை காலதாமதமின்றி அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக் களம் கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட அலுவலர்கள் தமது சேதவிபரங்களை வலயக் கல்வி அலுவலகங்களினூடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

பாதிப்பை உறுதிப்படுத்தக்கூடிய பொலிஸ் அறிக்கை, புகைப்படம், கிராம அலுவலகர் அறிக்கை, பிரதேச செயலர் அறிக்கை போன்றவற்றில் ஏதாவது ஒன்றின் நிழற்பிரதியையும் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள் ளது.

## கடும் காற்றினால் தொல்லை

நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையிலான கடற்போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போது வீசிவரும் கடும் காற்றினால் கடல் கொந்தளிப்படைந்து கடல்நீர் படகினுள் அள்ளி வீசப்படுகின்றது. இதனால் பயணிகளும் அவர்களது உடமைகளும் நனைந்து அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன.

# ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவையின் பணி

இ. சசிக்குமார்

போர்க்களங்களில் விழுப்புண்ணடைந்த தமது தோழர்களுக்கு மருத்துவப் பணிகளையாற்றி வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளி மருத்துவர்களின் பணி போர்நிறுத்த காலத்திலும் ஓய்வடைந்து விடவில்லை.

இவர்களின் பணி பல நவீன வசதிகளை உள்வாங்கியவாறு தமது தேச உறவுகளின் துயரைத் தீர்ப்பதற்கான தீவிர செயற்பாட்டினை மேற்கொள்ளத் தூண்டுதல் அளித்துள்ளது. மக்களுக்காக களத்தில் நின்று எதிரியிடமிருந்து உயிர்காத்த வீரர்கள் இன்று மக்களின் உயிரைக் காவு கொள்ளவரும் நோய்களிலிருந்து காக்கும் பணியை சுமந்தவாறு மக்களைத் தேடிச்சென்று கொண்டிருக்கின்றார்கள்.

இதன் ஓர் அங்கமாக தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான லெப் . கேணல் கௌசல்யன் ஞாபகார்த்த நடமாடும் மருத்துவ சேவையானது, தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவுப் போராளி மருத்துவர்களினால் பின்தங்கிய கிராமங்கள் தோறும் சென்று மக்களின் மருத்துவத் தேவையை பூர்த்தி செய்து வருகின்றது. பெருந்தொகையான போராளி மருத்துவர்களை உள்ளடக்கிய இக்குழுக்கள் மக்களின் வீடுகளுக்கே சென்று அவர்களின் மருத்துவத் தேவையை கண்டறிந்து பூர்த்தி செய்து வருகின்றன.

இவ்வாறு தமது சேவையினை கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் வவுனியா வடக்கு பாலமோட்டை கிராம மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்த போராளி மருத்துவக் குழுவின் மருத்துவரான தூயவனை சந்தித்து அவர்கள் செய்தபணிகளையும், அக்கிராமத்தின் நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ளும் முகமாக கேட்ட போது அவர்




இவ்வாறு கூறினார்.

கடந்த இரண்டு நாட்களாக லெப். கேணல் கௌசல்யன் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்ட இந்நடமாடும் மருத்துவ சேவையானது இங்கு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. எங்கள் மக்களின் மருத்துவ தேவையினை நிவர்த்தி செய்வதே இதன் பிரதான நோக்கம். இந்தப் போராட்டத்திற்கு பக்கபலமாகவும் முதுகெலும்பாகவும் செயற்பட்டு வரும் இப்பிரதேச மக்கள் எதிரியின் எல்லைகளை அண்டிய பகுதிகளில் வாழ்கின்றார்கள். இவர்கள் மருத்துவ ரீதியான வசதிகள் அற்று இதனை கவனிப்பாரற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். நீண்டகாலமாக மருத்துவ ரீதியான பிரச்சினைகளை எதிர் நோக்கி வந்தார்கள். எனவே இதனை நிவர்த்தி செய்வதற்காகவும் இவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு முக்கிய தடையாக இருந்த இம்மருத்துவ பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காகவும் இதத் தொடர்ந்து நிவர்த்தி செய்வதற்குமாக தமிழீழ தேசியத் தலைவரின் எண்ணத்தில் உதித்த இந்த மருத்துவ சேவையின் மூலம் இங்கு சேவையினை வழங்கி வருகின்றோம்.



இதில் குறிப்பிடக் கூடியதென்னவென்றால் நோயாளிகள், மருத்துவ சிகிச்சை பெறவிரும்புபவர்கள் வைத்தியசாலைகளையும், வைத்திய நிபுணர்களையும் தேடிச் செல்வது தான் வழக்கம். இங்கு மக்களை நாடி நோயாளிகளைத் தேடி வைத்தியர்களும் நவீன உபகரணங்களைக் கொண்ட ஆய்வுகூடங்கள், சத்திர சிகிச்சைக்கூடங்கள், பல்துறை சார்ந்த மருத்துவ நிபுணர்கள், அதாவது குழந்தை வைத்திய நிபுணர்கள், சத்திரசிகிச்சைக்கான வைத்திய நிபுணர்கள், பொது மருத்துவ நிபுணர்கள், பெண்நோயியல் மருத்துவ நிபுணர்கள், தோல், கண், மூக்கு, தொண்டை போன்ற வைத்திய நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள், போராளிமருத்துவர்கள் என பெருந்தொகையான வைத்திய நிபுணர்கள் வந்திருக்கின்றார்கள். இது எமது தேசத்தின் வளர்ச்சியில் ஒரு படிக்கல்லாக அமையும் என நாங்கள் நம்புகின்றோம் ஏனெனில் மக்கள் சுகதேகிகளாக இருக்கின்ற பொழுது தேசத்தின் வளர்ச்சிக்கு அது படிக்கல்லாக அமையும். நாங்கள் இந்த சேவையினை ஆரம்பித்து செய்கின்றபொழுது பல்வேறுபட்ட



பிரச்சினைகளை அவதானிக்கக் கூடியவாறு இருந்தது. தனிய மருத்துவம் சம்பந்தமாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் அவர்கள் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளார்கள். இதற்கு யுத்தம் ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது யுத்தம் தவிர்க்க முடியாததொன்றாக இருந்த காரணத் தினால் இவர்கள் பொருளாதார ரீதியாக, மருத்துவரீதியாக மட்டுமன்றி பல பக்கங்களாலும் மோசமான பாதிப்பை எதிர் நோக்கியுள்ளார்கள். இவற்றுக்கெல்லாம் அடிப்படையான காரணம் அரசியல் ஸ்திரமின்மை என்பதே வெளிப்படையானது. அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்துவதென்றால் அதற்காக மக்கள் நலமானவர்களாகவும், சுகதேகிகளாகவும் இருக்கவேண்டிய அவசியம் இருக்கின்றதனால் மருத்துவரீதியாக நாங்கள் எமது பணியை ஆற்றுகின்றோம். எனவே எம்மை பின்பற்றி ஏனைய சேவைகளும் இம்மக்களைத் தேடி வந்து உதவிபுரியும் என நம்புகின்றோம். அத்தோடு இந்த சேவையினை தொடர்ந்து நாங்கள் இம் மக்களுக்கு வழங்கவுள்ளோம்.

**※ இந்தப்பகுதியை பொறுத்தவரையில் இதற்கு முன்னதான மருத்துவ வசதிகள் எவ்வாறிருந்ததென்பதைக் கூறமுடியுமா?**

ஆம்- நாங்கள் இம்மக்களை அவர்களின் வீடுகளுக்குச் சென்று சந்தித்தபோது அவர்கள் கூறிய சில சம்பவங்களை இங்கு நான் கூற விரும்புகிறேன். ஒருநாள் காலை மூன்று மணிபோல் ஒரு எட்டுவயதுச் சிறுவன் பாம்புக் கடிக்கு இலக்காகி வைத்தியசாலையை நோக்கி சரியான பயணத்தினை மேற்கொள்ள முடியாமலிருந்த காரணத்தினால் அதாவது அன்று மழை பெய்து கொண்டிருந்தது வாகனப் போக்குவரத்து இங்கில்லை மோட்டார் சைக்கிளிலே ஏற்றிக்கொண்டு செல்வதற்கு வீதியால் பாய்ந்து கொண்டிருந்த வெள்ளம் வழி விடவில்லை. இதன் காரணமாக அச்சிறுவன் இறந்துவிட்டான். இரண்டு மணித்தியால பயணத்தூரத்தில் இருக்கின்ற வைத்தியசாலையை சென்றடைய முடியாத காரணத்தினால் சிகிச்சையின் மூலம் காப்பாற்றப்படக் கூடிய அச்சிறுவன் இறந்திருக்கிறான் இதுபோன்று ஏராளமான பிரச்சினைகள் இங்கு இருக்கின்றன. உதாரணமாக மார்புப் புற்று நோயுடைய ஒரு பெண்மணி அதற்கான சிகிச்சை பெறுவதற்கான இடத்திற்குச் செல்லமுடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார். இதை விட உயர்குருதியமுக்கம், நீரிழிவு போன்ற நோயாளிகளும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இவ்வாறான நோய்கள் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டால் அவர்களுடைய வாழ்க்கைக் காலத்தை கூட்டக்கூடியதாக விருக்கும். அவ்வாறு தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் கூட தீர்க்கப்படாமல் இருந்திருக்கின்றன.

**※. இந்நடமாடும் மருத்துவ சேவையினை செய்வதற்காக நீங்கள் உரிய பகுதிகளை எவ்வாறு தெரிவு செய்கின்றீர்கள் இவ்வாறு துயருறும் ஏனைய பகுதிகளுக்கும் இச்சேவைகள் சென்றடைய வாய்ப்புள்ளதா?**

பொதுவாக மருத்துவ வசதிகள் குறைவான இடங்கள், போக்குவரத்து பிரச்சினையாகவுள்ள இடங்கள் விரைவாக வைத்திய சாலைகளை வந்தடைய முடியாத இடங்கள் போன்ற பகுதிகளுக்கு நாம் முன்னதாகவே துறைசார்ந்தவர்களை அனுப்பி இந்தப் பிரச்சினைகளை ஆய்வு செய்து அதன்பின்னர் மருத்துவ தேவை பற்றி ஆலோசித்த பின்பே நாம் இச்செயற்பாட்டில் ஈடுபடுகின்றோம்.

**※. நடமாடும் சேவையாக பணிபுரியும் இந்த மருத்துவ சேவை இது போன்ற பின்தங்கிய கிராமங்களில் நிரந்தரமான செயற்பாட்டினைக் கொண்டதாக அமைப்பதற்கான ஒழுங்குகள் ஏதும் உண்டா?**

ஆம்- நாங்கள் இவ்வாறான பிரதேசங்களை அலசி ஆராய்கின்ற பொழுது அதாவது பிரதான மருத்துவ நிலையங்களிலிருந்து வெகு தொலைவிலிருக்கின்ற போக்குவரத்து வசதி குறைந்த பகுதிகளில் திலீபன் மருத்துவமனையினை அமைக்கின்றோம். அங்கு உடனடி உயிர்காப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம் மேலதிக சிகிச்சைக்காக அவர்களை அங்கிருந்து வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம் என்றார்.

இதேபோன்று இதேபணியில் ஈடுபட்ட போராளி மருத்துவர் வான்மதி இப்பகுதி மக்களின் மருத்துவ தேவைகள் குறித்து எம்மோடு இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

இந்த கௌசல்யன் நடமாடும் சேவையானது, மக்களை ஓர் இடத்திற்கு அழைத்து அங்கு வைத்து வைத்தியம் பார்ப்பதோடு நின்று விடாமல் இந்தப்பிரதேசத்திலே இருக்கின்ற அனைத்து வீடுகளுக்கும் பன்னிரண்டு குழுக்களாக நாங்கள் பிரிந்து மக்களின் வீடுகளில் வைத்தே அவர்களை பரிசோதித்து வந்தோம். இதைத்தவிர ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று பற்சிகிச்சைகளையும் ஏனைய சிகிச்சைகளையும் வழங்கி வருகின்றோம். இதை விட நாம் வீடுகளுக்குச் சென்று நோயாளிகள் என இனங்கண்டவர்களை ஓர் இடத்திற்கு அழைத்து வருவதற்கான போக்குவரத்து வசதிகளையும் ஒழுங்குபடுத்தியிருக்கின்றோம். இதனூடாக அவர்களை அழைத்துவந்து இங்கு சத்திர




சிகிச்சை, பற்சிகிச்சை. கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குதல் போன்ற சேவைகளையும் செய்து வருகின்றோம்.

**※ இவ்வாறான நவீன வசதிகளைக் கொண்டதான இந்த நடமாடும் மருத்துவ சேவையினை மருத்துவப் பிரிவினர் ஆரம்பிப்பதற்கு தூண்டுதலாக அமைந்த காரணி என்னவென்று கூறமுடியுமா?**


எமது பிரதேசமானது போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பதனால் தற்போது மீள்குடியமர்விற்குட்பட்டு வருகின்ற நேரத்தில் அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளான வைத்தியவசதி, பாடசாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாததனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுவதோடு மருத்துவ வசதி கூட போதிய அளவு கிடைக்கவில்லை. மிக நீண்ட தூரப் பயணத்தின் பின்பு தான் அவர்கள் மருத்துவத்தை பெறக்கூடியதாக இருப்பதனாலே உயிர் ஆபத்து ஏற்படுகின்ற கட்டங்களில் மட்டும் தான் அவர்கள் வைத்தியசாலைக்கு வரக் கூடியதாக இருக்கின்றதே தவிர, சிறிய நோய்களையோ அல்லது பாரதூரமாக வருகின்ற நீண்டகால நோய்களை குணப்படுத்தவோ இவர்கள் வைத்தியசாலைக்கு செல்வது மிகக் குறைவாகவே இருக்கிறது.இதைவிட இலங்கையின் மருத்துவ ஒழுங்கு விதிகளின்படி குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவர்கள் பாடசாலைகளை தரிசிப்புச் செய்து அங்கிருக்கும் மாணவர்களுக்குள்ள நோய்களை இனங்காணுதல், சிகிச்சையளித்தல், பற்சிகிச்சையளித்தல் என்பன நடைமுறையில் இருக்க வேண்டிய விடயங்கள். ஆனால் எமது பிரதேசங்கள் பின்தங்கிக் காணப்படுவதாலும் போரினால் பாதிக்கப்பட்டதனாலும் அரசாங்கமே இவர்களை பின்னடைவுக்குள்ளாக்கியதனாலும் இந்நடைமுறை பாடசாலைகளில் இல்லாதுள்ளன. எனவே கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையினூடாக நாங்கள் பாடசாலைகளுக்குச் சென்று இச்சேவையை செய்து வருவதோடு பின்தங்கிய பகுதியாதலால் பற்தூரிகை மூலம் பல்துலக்கும் முறையினையும் கற்பித்து பற்பசை, பற்தூரிகை போன்றவற்றையும் வழங்கியுள்ளோம்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# அழிவுப்பாதை நோக்கி...

ஜே.வி.பி யின் பகல் கனவுக்கு என்ன நடக்கப்போகிறது. இது ஜே.வி.பி யின் பகல் கனவல்ல. மங்கள சமரவீரவினால் உருவாக்கப்பட்டு ஜே.வி.பியினருக்கு கொடுக்கப்பட்ட பகல் கனவாகும். இந்தக்கனவினால் சனாதிபதியின் நல்லெண்ணத்தை வென்றெடுப்பதுடன் ஜே.வி.பி யின் வளர்ச்சியைத்தனக்கு சாதகமாக்கிக்கொள்வதே மங்கள சமரவீரவின் திட்டங்களில் ஒன்றாகும்.

இத்திட்டம் மிக சாதுரியமாகத் தயாரிக்கப்பட்டதொன்றாகும். சனாதிபதிக்காகவே வர்ணம் தீட்டிய அழகான இனிப்புக்கேக் ஒன்றை மங்களசமரவீர தயாரித்திருந்தார். இந்த



இனிப்புக் 'கேக்' பார்ப்பதற்கு மேலப் பக்கம் மிக அழகாக அமைந்திருந்தது.

ஆனால் அதன் உட்பகுதியின் நிலை என்னவென்று சனாதிபதிக்குத் தெரியவில்லை. இந்தக் கேக்கை மங்கள சமரவீர தயாரிக்கும் பொழுது அன்றைய ரணில் ஆட்சியில் இருந்து கடும் எதிர்ப்பு, அரசியல் ஏவுகணைகள் சனாதிபதிக்கு ஏவப்பட்டன. இந்த ஏவுகணையில் இருந்து பாதுகாப்பதற்கான கவசமாக ஜே.வி.பியை உருவமாகச் செய்து சனாதிபதிக்குக் காட்சியாக மங்கள சமரவீர வைத்தார். சனாதிபதி அப்பொழுது நிலைதடுமாறிக் கொண்டிருந்த வேளையில் அவரை அதிலிருந்து அகற்றி ஜே.வி.பி மூலம் சனாதிபதியைப் பாதுகாப்பதுடன் அவரின் பதவிக்காலத்தையும் நீடிக்க முடியுமென மங்கள சமரவீர சனாதிபதிக்கு உறுதியளித்தார்.

ஆனால் முதல் சுற்றில் சனாதிபதி அதை நிராகரித்தார். தனது கணவரைக் கொலை செய்தவர்களுடன் எப்படிக் கூட்டுச்சேர்வது? என்ற விடயம் இவரின் மனதில் மிக ஆழமாகப் பதிந்திருந்தது. இதை இவர் மங்கள சமரவீரவிடம் எடுத்துக் கூறினார். கடந்தகால சம்பவங்களை மறந்து எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டுமானால் இக்கூட்டு மிக அவசியம் என்பதை சனாதிபதிக்கு தெளிவுவர எடுத்துக்கூறி ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு சம்மதத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி அவரை ஓர் அரசியல் பொம்மையாக்கி தமது தாளத்திற்கு ஆட்டவைப்பதே ஜே.வி.பி யின் பிரதான நோக்கமாக இருந்தது. அதை அவர்கள் சமரவீர மூலமாக நிறைவேற்றிக் கொண்டனர்.

அதேநேரத்தில் தன்னைப் பாதுகாப்பதற்கு ஜே.வி.பி சிறந்த கவசம் என சனாதிபதி கருதி அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்தார்.

முதலாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் மூன்று அமைச்சுக்களை ஜே.வி.பி யினருக்கு தருவதற்கு சந்திரிகா இணங்கினார். அதன்பிறகு சனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அழுத்தங்களைக் கொடுப்பது ஜே.வி.பியின் வேலையாகியது. இதேவேளை தான் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லையென சனாதிபதி உறுதியளித்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தோல்வியைச் சந்தித்தால் தனக்கு நாட்டில் ஏற்படும் தலைவிதியைப் பற்றி அவர் நன்கு உணர்ந்திருந்தார். ஆனால் கடைசியில் முழுத் தைரியத்துடன் பாராளுமன்றத்தைக் கலைத்து ஜே.வி.பி யினருடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். தனது கணவரை ஜே.வி.பி யினர் கொலை செய்ததற்கு இந்த ஒப்பந்தம் மூலம் ஜே.வி.பி யினருக்கு பாவமன்னிப்பை வழங்கினார். சந்திரிகாவின் திட்டத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காவிட்டாலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசை தோல்வியுறச்செய்து புதிய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இந்தத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பூதம் சித்திரக்குள்ளனாக்கப்பட்டு சித்திரகுள்ளனாக இருந்த ஜே.வி.பி பூதமாகி விட்டது. இதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும், சனாதிபதியுமான சந்திரிகா அம்மையாரை ஜே.வி.பி தனது கைப்பொம்மையாக்கி தாம் அடிக்கும் மேள வாத்தியங்களுக்கு ஏற்ப நடனமாட வைத்தது. சொல்லப்போனால் ஜே.வி.பியின் கைதியாகவே சந்திரிகா அம்மையார் இருந்தார். பிறகுதான் அம்மையாருக்கு சுடலைஞானம் பிறந்தது. இந்த இக்கட்டான சிக்கலில் இருந்து தாம் எப்படி வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கினார். இந்த விடயத்தில் சனாதிபதியைக் காப்பாற்றும் எண்ணம் ஜே.வி.பி க்குக் கிடையாது. அதற்கு மாறாக அவரையும், அவரது கட்சியையும் படிப்படியாக அழித்தொழிக்கும் படலத்தை ஆரம்பித்த பொழுதுதான் சனாதிபதி விழித்துக்கொண்டார்.

சனாதிபதிக்குள்ள முழு அதிகாரத்தையும் புரிந்து கொண்டதுடன் சனாதிபதித்தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்தி ஜே.வி.பியினரின் தந்தங்களை உடைத்தெறியும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மறுபடியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும், ஜே.வி.பி யையும் ஒன்றிணைக்க முடியாத நிலைக்கு விரிசல் ஏற்பட்டு அந்த விரிசல்கள் இப்பொழுது வெடிக்கத்தொடங்கியுள்ளது.

சனாதிபதி பதவியை மட்டுமல்ல தனது கட்சியினர்களையும் அடக்கி ஆளும் தன்மை இல்லாத நிலைக்குத் தள்ளப்படும் நிலையில் இருந்து சந்தரிகா கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்குப் பெரும் நம்பிக்கையை ஊட்டியது. எனவே அவருக்கு எதிராகக் கட்சியில் எவரும் போர்க் கொடிதூக்க முன்வரமாட்டார்கள்.

ஆகவே பிரதமர் மகிந்தராஜபக்ஷ அல்லது ஜே.வி.பி க்கு ஆதரவாகக்கட்சியில் எவரும் எதிர்ப்புக்காட்டமாட்டார்கள். ஜே.வி.பி போட்ட திட்டங்கள் யாவும் தவிடுபொடியாகிவிட்டன. தற்பொழுது இஞ்சி தின்ற குரங்கின் நிலைமைக்கு ஜே.வி.பி யினர் தள்ளப்பட்டுள்ளனர்.

தனித்துப்போட்டியிட்டால் பழைய சித்திரக் குள்ளன் நிலைமைக்கு ஜே.வி.பி தள்ளப்படும். அதேபோல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தைத் தாம் கைப்பற்றும் நோக்கமும் பகல் கனவாகிவிட்டது. இப்பொழுது ஜே.வி.பி யினால் எதைச்செய்யமுடியும்? சனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கையொப்பம் இட்டபின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஜே.வி.பி மீண்டும் அங்கம் வகிக்குமானால் மக்கள் முன்னிலையில் இவர்கள் கேலிக் குரியவர்களாகி விடுவார்கள்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நாட்டைக் கொடுத்து விட்டு சிங்கள தேசத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டார்களென பலர் நினைக் கலாம். இது பழையகதை. ஆனால் இதற்கு முன்னதாகவே உலக மக்களின் அனுதாபத்தையும், உலகநாடுகளின் அனுசரணையும் பெற்ற ஒரு ராஜதந்திர இயக்கமாகப் புலிகள் இப்பொழுது மாறியுள்ளார்கள் என்பதை கூச்சல் இடுபவர்கள் மறந்து விடலாகாது. சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்பட்டது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் யாவும் விடுதலைப் புலிகள் ஆட்சி செய்துவருகின்றனர் என்பதை அரசாங்கம் ஒத்துக் கொண்டுள்ளது. பின் அவர்களுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களின் போக்குவரத்திற்கு உலங்கு வானூர்திகளும் வழங்கப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது ஆனபடியால்




பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்புக்கோசம் இடுபவர்கள் அரசியல் முட்டாள்களாகக் கருதவேண்டும்.

விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறும் ஜே.வி.பி தங்களின் கடந்த காலத்தை மறந்து விட்டனர். ஆயுதப்போராட்டத்தினால் அரசைக்கைப்பற்ற முயற்சித்தார்கள். இவர்களின் ஆயுதப்போராட்டத்திற்கு அப்பாவிச் சிறுவர்களைப்பலிகொடுத்தார்கள். ஆயிரக் கணக்கில் தங்களுக்கு எதிரானவர்களைக் கொன்று குவித்தார்கள்.

சனநாயக வழிமுறைகளைத்தெரிந்து கொண்டு இவர்கள் வரவில்லை. இவர்களின் ஆயுதப்போராட்டம் படுதோல்வியைத் தழுவியபடியால் செய்வதற்குவேறு வழி எதுவும் இல்லாமல் சனநாயகத்தைத் தழுவிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டார்கள். ஜே.வி.பி யின் போராட்டத்தை அடக்கியது போல் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அரசாங்கம அடக்க முடியாமல் போனபடியால் விடுதலைப்புலிகளுடன் அரசு சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டது.

விடுதலைப்புலிகளை அடக்குவதற்கு எவ்வளவோ தந்திரோபாயங்களையும், போர்த்தந்திரங்களையும், வெளிநாட்டு உதவிகளையும், போர்த்தளபாடங்களையும் குவித்து யுத்தம் புரிந்தார்கள். ஆனால் இவற்றையெல்லாம் விடுதலைப் புலிகள் எதிர்த்து யுத்தம் புரிந்தபடியால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு பேச்சுவார்த்தை மூலமாக புலிகளுடன் சமாதானம் செய்துகொண்டது. ஆனால் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்த்துக்கொள்வது அவ்வளவு கடினமான விடயம் அல்ல. தங்களுக்கென கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்துள்ளார்கள். முப்படைகள் இவர்களிடம் உண்டு. ஆகவே ஒரு நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் உண்டு என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும். ஒரு நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருக்க முடியாது.

இந்த இரண்டையும் ஒன்றிணைக்க வேண்டும். இதுவே இன்றைய அரசாங்கத்திற்கு உள்ள பெரிய சவாலாகும். இந்தப்பிரச்சினையை யுத்த மூலம் தீர்க்க முடியாதென்பதை நாடு இன்று நன்கே உணர்ந்துள்ளது. ஆனால் ஜே.வி.பி இப்பொழுது இலங்கையை விட இந்தியாவை அதிகமாக நேசிக்கத்தொடங்கியுள்ளது. இந்தியா ஜே.வி.பியைப்பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை என்பதை அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் மூலம் தெரிய வந்துள்ளது. அங்கு மாகாண ஆட்சிகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. இந்தியப் பிரதமர் ஒருசீக்கிய இனத்தைச்சேர்ந்தவர். இந்திய சனாதிபதி முஸ்லிம் இனத்தைச்சேர்ந்தவர், சனாதிபதியாக இருப்பவர் ஒரு இந்து மதத்தவர் அல்ல. அவர் ஒரு முஸ்லிம். ஆகவே நம் நாட்டு

**சேகரா (ராவய)**
**மொழியாக்கம் அ.சக்திவேல்**

அரசியல் வாதிகள் தற்பொழுது இந்திய அரசியல் நடைமுறையைப் பின்பற்றவேண்டும். அங்கே அவர்கள் மதத்தைத் தலையில் சுமந்து கொண்டு ஆடவில்லை என்பதை எமது நாட்டவர்கள் உணர்ந்து கொண்டு நடந்தால் மிக நன்மை தரும்.மதத்தின் பெயரால் நாட்டை அழிவுப்பாதைக்குத் தள்ள வேண்டாம். மக்களை ஏமாற்ற வேண்டாம்.

---

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**❋ இப்பகுதி மக்களினுடைய எதிர்கால மருத்துவத்தேவைகள் எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இப்பகுதி மக்களுக்கான மருத்துவத் தேவை என்பது இரண்டு அல்லது ஐந்து வீதமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.இவர்களுக்கான இத்தேவையினைப் பூர்த்தி செய்யவேண்டிய தேவை எமக்கு நிச்சயமாக உண்டு. ஏனெனில் முற்றாக போக்குவரத்து வசதி அற்ற நிலை காணப்படுவதும் வைத்தியசாலைகள் மிகத்தொலைவிலிருப்பதும் ஓர் முக்கிய காரணமாகும். அத்தோடு இப்பகுதியில் அரசாங்க வைத்தியசாலைகள் என்று எதுவுமே இயங்கவில்லை. தியாகதீபம் திலீபன் மருத்துவமனை மட்டுமே இயங்குகிறது. ஆகவே இப்பிரதேசத்தின் மிக அவசிய தேவை கருதி ஓரளவேனும் வசதியுடைய மருத்துவமனையையாவது அமைக்க வேண்டும் என்றார்.

இதேவேளை தாம் எதிர்பாராத வகையில் தமது மருத்துவத்தேவைகள் குறுகிய காலத்தில் தீர்க்கப்பட்டதை எண்ணிப் பெருமிதமடைந்த நிலையில் பாலமோட்டை, பனிச்சங்குளத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் புவனேஸ்வரி அவர்கள் இம்மருத்துவர்களின் சேவை பற்றி இவ்வாறு கூறினார்.

நாங்கள் இப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இப்போது மீளக் குடியமர்ந்து வருகின்றோம். ஆனால் எமது பகுதிக்கு இதுவரை போக்குவரத்து வசதிகளோ, மருத்துவ வசதிகளோ, ஏனையவசதிகளையோ செய்து



புவனேஸ்வரி

தர எவரும் முன்வரவில்லை. நாங்கள் மிகநீண்ட தூரம் பயணம் செய்தபின்பே மருத்துவமனைகளுக்கு செல்லக் கூடியதாக இருக்கின்றது. அதிலும் மிக அவசரமான ஆபத்தான வேளைகளில் மருத்துவமனைக்கு செல்கின்ற நோயாளிகள் செல்லும் வழியிலேயே இறந்து போகின்ற சம்பவங்களும் நடந்ததுண்டு. வவுனியா அல்லது மல்லாவி வைத்தியசாலைகளுகரு சென்றாலும் மருந்து பெற முடியாத நிலைகளும் ஏற்படுவதுண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த மருத்துவப்பிரிவினர் இப்பகுதிக்கு வந்து எமது மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்து வருவது எமக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது. அத்தோடு ஒவ்வொரு வீட்டுக்கும் மருத்துவ போராளிகள் வந்து எமது நோய்களை கண்டறிந்து சிகிச்சையளிக்கின்றார்கள். அத்தோடு நாம் மிக நீண்ட தூரம் சென்றாலும் செய்யமுடியாத சத்திரசிகிச்சைகளைக் கூட இங்கு இலகுவாக செய்துள்ளோம் எனவே தொடர்ந்தும எமது பகுதிகளுக்கு இவ்வாறான சேவையைச் செய்ய வேண்டுமென அவர்களை நான் கேட் டுக்கொள்ளதோடு இவர்களின் இந்த சேவைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

எனவே லெப்.கேணல் கௌசல்யன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்டு வரும் இம் மருத்துவப்பணியானது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ ரீதியில் பெரும் பயனாற்றி வருகின்றதென்பது மட்டுமன்றி இதன பணி மூலம் எதிர்காலத்தில் தமிழீழ மக்களின் மருத்துவக்குறைபாடுகள நிவாத்தி செய்யப்பட்டு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும் முடியும்.

# கேள்வி அறிவித்தல்

## மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை.

## சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான திட்டம் (STAART)

## உட்கட்டமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (IRP)

01) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான (STAART) திட்டச்செலவின் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) நிதி உதவி திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினைப் பெற்றுள்ளதுடன் அந்நிதியின் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பொருத்தமான செலவுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கேள்வி குறியீட்டு இல. | வீதியின் பெயர். | இக்ராட் (வீதி)பதிவின் ஆகக்குறைந்த தரம். | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா | கேள்விப்பிணை ரூபா |
|---|---|---|---|---|
| மாவட்டம்: முல்லைத்தீவு | | | | |
| STAART/NEP/MU/7A | இரட்டை வாய்க்கால்–மத்தளம் சாலை வீதி 2–8 கி. மீ | M5 | 1,750/- | 170,000/- |
| STAART/NEP/MU/7B | இரட்டை வாய்க்கால்–மத்தளம் சாலை வீதி 9–13 கி. மீ | M5 | 1,500/- | 140,000/- |
| மாவட்டம்: மட்டக்களப்பு | | | | |
| STAART/NEP/BT/1A | டச்பார் முகத்துவாரம் ஸ்ரேஜ்–1 (0–3 கி. மீ) | M5 | 1,750/- | 120,000/- |
| STAART/NEP/BT/5 | ஒந்தாச்சி மடம் மகிழூர் குருமண்வெளி வீதி | M5 | 1,750/- | 140,000/- |
| மாவட்டம்: திருகோணமலை | | | | |
| STAART/NEP/TC/9 | பொல்முனை வீதி | M5 | 1,750/- | 155,000/- |
| STAART/NEP/TC/13 | வெருகல் முகத்துவாரம் வீதி | M5 | 1,750/- | 115,000/- |
| மாவட்டம்: யாழ்ப்பாணம் | | | | |
| STAART/NEP/JF/1A | மண்முனை–கட்டைக்காடு வீதி பகேஜ்–1(0–6 கி. மீ) | M5 | 1,750/- | 192,500/- |
| STAART/NEP/JF/1B | மண்முனை–கட்டைக்காடு வீதி பகேஜ்–2(7–10 கி. மீ) | M5 | 1,750/- | 175,000/- |
| STAART/NEP/JF/1C | மண்முனை–கட்டைக்காடு வீதி பகேஜ்–3(11–14 கி. மீ) | M5 | 1,750/- | 182,500/- |
| STAART/NEP/JF/1D | மண்முனை–கட்டைக்காடு வீதி பகேஜ்–4(15–22 கி. மீ) | M5 | 1,750/- | 102,500/- |

02) மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கான பொறி வைக்கப்பட்ட (soalod) கேள்விகள் அமைச்சு கேள்விச்சபையின் சார்பில், மாகாண பொது நிர்வாக, வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி அமைச்சு செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

03) கேள்வி ஆவணங்களை திருகோணமலை கிறீன் வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச்செலுத்தி 2005.06.15 ஆம் திகதி முதல் 2005.07.06 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.30 மணி முதல் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

04) கேள்வி ஆவணங்களை மேற்கூறிய அலுவலகத்தில் கட்டணம் எதுவுமின்றி பார்வையிட முடியும்.

05) கேள்விகள் அவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானவையாகவிருத்தல் வேண்டும்.

06) கேள்விகள் மேலே கூறப்பட்ட கேள்விப்பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், பிணை ஆனது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு இருத்தல் வேண்டும்.

07) கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2005.07.07 பி.ப 2.30 மணியாகும்.

08) பொறிவைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக "தலைவர், கேள்விச்சபை, மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிறீன் வீதி, திருகோணமலை" என்ற முகவரிக்கு கிடைக்கப்பெறத்தக்கதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09) கேள்விகள் யாவும் மேற்கூறிய முகவரியில் கேள்வி நேரம் முடிவுற்ற உடன் திறக்கப்படும்.

10) கேள்விகள் கோருவோரோ அல்லது அவர்களது அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்க முடியும்.

11) மேலதிக விபரங்களுக்கும் விளக்கங்களுக்கும் மாகாணப்பணிப்பாளரை அல்லது பிரதம பொறியியலாளரை 026-2222878, 026-2221020 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

*அ. வி. பத்மநாதன்,*
*செயலாளரும் தலைவரும்,*
*அமைச்சுக் கேள்விச்சபை, (வ. கி. மா)*
*மாகாண பொது நிர்வாக வீதி அபிவிருத்தி உள்ளூராட்சி அமைச்சு,*
*திருகோணமலை.*

(சி.12205)

# சோனியா டில்லி திரும்பியதும் மத்திய மந்திரி சபையில் மாற்றம்

## -இந்தியப்பிரதமர் முடிவு



(புதுடில்லி)

ரஷ்ய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சோனியாகாந்தி டில்லி திரும்பியதும், மத்திய மந்திரி சபையில் மாற்றம் செய்ய பிரதமர் மன்மோகன்சிங் முடிவு செய்துள்ளார்.

மத்தியில் தற்போது பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசு பதவியில் இருக்கிறது. மொத்தமுள்ள 543 பாராளுமன்ற உறுப்பினர்களில் 15 சதவீதம் பேர் அதாவது 81பேர் மந்திரிகளாக இருக்க முடியும்.

தற்போது 65 பேர் மத்தியமந்திரி சபையில் இடம்பெற்றுள்ளனா். இதில் 27பேர் காபினட் மந்திரிகள், 10 பேர் சுய அதிகாரம் கொண்ட ராஜாங்க மந்திரிகள் மேலும் 28 பேர் ராஜாங்க மந்திரிகள். எனவே இன்னும் 16பேர்களை மந்திரிகளாக நியமிக்கலாம்.

மத்திய விளையாட்டுத்துறை மந்திரியாக இருந்த சுனில்தத் சமீபத் தில் இறந்துவிட்டார். சில மாதங் களுக்கு முன் மத்திய நிலக்கரி துறை மந்திரியாக இருந்த சிபு சோரன் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

மேலும் பெற்றோலிய- இயற்கை எரிவாயு பஞ்சாயத்துராஜ்துறைகளைக் கவனித்துவரும் மணிசங்கர் ஐயருக்கு உதவி செய்ய இராஜாங்க மந்திரிகள் இல்லை.

கேரளா, ஒரிசா, சத்தீஷ்கார், பஞ்சாப், இமாசலபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மத்திய மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் இதுவரை கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் மந்திரி சபையில் வெற்றிடமாக உள்ள இடங்களை நிரப்பவும் பெற்றோலியத்துறைக்கு ஒரு இராஜாங்க மந்திரியையும், பஞ்சாயத்துராஜ் துறைக்கு ஒரு இராஜாங்க மந்திரியையும் நியமிக்க மன்மோகன்சிங் முடிவு செய்து இருக்கிறார்.


## யாழ்.பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

### அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக கணினி அலகினால் IRQUE Project இனால் நடத்தப்படுகின்ற தகவல் தொழில் நுட்ப வகுப்புக்களுக்கு பதிவு செய்த இறுதி வருட கலை மற்றும் முகாமைத்துவ வணிக பீட மாணவர்களுக்கு புதிய பிரிவிற்கான வகுப்புக்கள் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை (21.06.2005) காலை 9.00 மணிக்கு கணினி அலகில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பெயர்களை கணினி அலகில் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

Deputy Director, Administration
IRQUE Project

(சி.12213)






## தமிழீழ போக்குவரவுக்கழகத்தினரை வாழ்த்துகின்றோம்

முல்லைத்தீவு மக்களின் குறைகளில் ஒன்றான போக்குவரத்துச்சேவையினை திறம்பட நடாத்திவரும் தமிழீழ போக்குவரவுக்கழகத்தினருக்கு நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 1996ஆம் ஆண்டு மீள விடுதலைப்புலிகளால் முல்லைத்தீவு மீட்கப்பட்டபோது எந்த ஒரு நிறுவனமும், முல்லைத்தீவு சேவையைச் செய்ய முன்வரவில்லை. அந்த வகையில் தமிழீழ போக்குவரவுக்கழகப் பொறுப்பாளர் அவர்களுடன் முல்லை மக்கள் சார்பாக போக்குவரத்துச் சேவையினை முல்லைத்தீவிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டதற்கு அமைவாக 2003.01.01 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு பேருந்து தரிப்பு திறப்பு, முகமாலை பேருந்துக்களை அனுப்பி மக்களின் போக்குவரத்துக்கு உதவினீர்கள். அதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கான தமிழீழப் போக்குவரவுக் கழகப்பணிமனையினை 15.06.2005 ஆம் திகதி அன்று ஆரம்பித்து சுனாமிக்குப்பின்னர் முதன் முதலாக எமது மண்ணில் உயர்ந்து நிற்கும் கட்டடத்தினை அமைத்து சேவையினை ஆரம்பித்த தமிழீழ போக்கு வரத்துக் கழகத்தின் பொறுப்பாளருக்கும், பணியாளர்களுக்கும் முல்லை. மக்கள் சார்பாக முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினரும், அதன் கிளைச்சங்கங்களும், வர்த்தகர் சங்கமும் நன்றியினையும், வாழ்த்தையும் தெரிவித்து நின்கின்றோம்.

"நன்றி"

அ.மரியராசா,
தலைவர்,
முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
முல்லைத்தீவு.

(சி.12254)

## புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா

### வெற்றிலைக்கேணி

*13.06.2005-22.06.2005*

*நற்கருணை விழா 21.06.2005*

*திருநாள் திருப்பலி காலை 7.00 மணிக்கு யாழ்.ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.*

*இறையருளை நிறைவாகப் பெற (22.06.2005) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*பங்குத்தந்தையர்,*
*ஆலய மக்கள்,*
*புனித அந்தோனியார் ஆலயம்,*
*வெற்றிலைக்கேணி*

*(6271)*

## வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

### கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்

### "உடன் தேவை"

கூலி ஒப்பந்த அடிப்படையில் அடுக்குமாடிக் கட்டடங்கள், சாதாரண கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தகுதியான ஆளணி உடையோரும், ஆற்றலுடையோரும் உடன்தேவை.

- கூலி வீதம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
வடகிழக்குக்கட்டுமானத் தொழில்நுட்பநிறுவனம்,
கண்டிவீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

தொலைபேசி எண்: 021-2285917

(சி-12205)


## சாவு அறிவித்தல்


### திரு.கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

அனலதீவைப்பிறப்பிடமாகவும் 209 சிவசுந்தரம் வீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்கள் 13.06.2005 திங்கட்கிழமை சாவடைந்து விட்டார். அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை,தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்ற துரையப்பா நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மங்கையற்கரசி அவர்களின் அன்புக்கணவரும், காலம் சென்ற ஆறுமுகம்,காலம்சென்ற கனகசபை,செல்லம்மா, அருணாசலம், பேரம்பலம், காலம்சென்ற சண்முகம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், இரத்தினம், கனகம்மா, தியாகராசா, இரத்தினசபாபதி மதியாபரணம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் , சாந்தலெட்சுமி (கனடா), சிவபாலன், லவநேசன்(பிரான்ஸ்) , கௌரி(கனடா), காலம்சென்ற இந்திரசித்து (மாவீரர்), திருமகள்,மோகனவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், சகாதேவன் (கனடா) சாரதாதேவி , புஸ்பமலர் (பிரான்ஸ்) , குகேந்திரன் (கனடா), சசீதரன், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரிகா,சஞ்சிகா, சோபிகா, சதீஸ், சுபாசினி, சுகர்தா, குகறஜனி, சங்கவி, பிரவினா, தர்ஜினி, கீர்த்திகா,தர்சிகா, கர்சிகா,ததுஜன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக இன்று காலை (16.06.2005 )10.00 மணியளவில் மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
குடும்பத்தினர்,
209 சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

*(சி.12210)*

# 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஜமேக்க வீரர் புதிய சாதனை



ஜமேக்க நாட்டின் அஸபா பவல் எதென்ஸ் மைதானத்தில் நடைபெற்ற நூறு மீற்றர் ஓட்டப்போட்டியில் புதிய சகல சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். நேற்று மூன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்க வீரர் மொன்டிகொமரி எடுத்துக்கொண்ட 9.78 செக்கன் என்ற நேரத்தை முறியடித்து இவர் 9.77செக்கனில் மேற்படி தூரத்தை ஓடி முடித்தார்.

மொன்டி கொமரி பரிசில் மூன்று வருடங்களுக்கு முன் நடைபெற்ற நூறு மீற்றர் தூரத்தை 9.78 செக்கனில் ஓடினார்.

இது பற்றி 22 வயது பவல் குறிப்பிடும்போது இந்தச் சாதனை ஒரு மனிதன் எவ்வளவு வேகமாக ஓட முடியும் என்பதை அறிய முடியா திருப்பதை உணர்த்துவதாகத் தெரிவித்துள்ளார்.




எவ்வாறேனும் கடந்த காலங்களில் பத்து முறை ஓடி பத்து செக்கன்களை எடுத்ததும் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற தவறியதையும் இந்தச் சாதனை ஈடு செய்யாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1990 இற்குப் பின்னர் சாதனை நிகழ்த்தியோர், அமெரிக்காவின் பரெல் 14-06-91-9.90 செக்கன், லூயிஸ் 25-08-91-9.86 செக்கன், பரெல் 27-07-94-9.85 செக்கன், பெய்லி (கனடா) 27-7-96-9.84 செக்கன், கிறீஸ் (அமெ) 16-6-99 -9.79 செக்கன், மொன்டிகொமரி (அமெ)14-9-02-9.78 செக்கன், அஸபா பவல் (ஜமேக்க) 14-6-05-9.77 செக்கன்.

# திறமையிருக்கும் வரை அணிக்காக விளையாடவே விரும்புகிறேன்–லாறா



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான பிரைன் லாறா அந்நாட்டுக் கிரிக்கெட் சபை தான் அணிக்குத்திரும்புவதை வரவேற்றால் அதனை நிராகரிக்கப்போவதில்லை என்றும் திறமையிருக்கும் வரை நீண்ட நாட்களுக்கு அணிக்காக விளையாட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் பிரகாசிக்கத் தவறினாலும் டெஸ்ட் போட்டிகளில் தனது திறமையை வெளிக்காட்ட முடிகிறது என்று தெரிவித்த லாறா, தற்போது நல்ல நிலையில் ஆடிவரும் தான் கிரிக்கெட்டுக்கு செலுத்த வேண்டிய கடமையிருந்தால் அதனைத் தீர்த்துவிடத் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

லாறா அணித்தலைமையை இழந்த பின்னர் ஐந்து டெஸ்ட் போட்டிகளில் 724 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்ற சுனாமிநல நிதி போட்டியில் அவர் 27 பந்துகளில் ஒரு சிக்சர் உட்பட 42 ஓட்டங்களைப் பெற்றார். மேற்கிந்தியத்தீவுகள் அணி 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு முன்பு இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளாது. எனினும் அதன் பின்னர் லாறா ஓய்வில் செல்லும் சாத்தியமுள்ளது.

மேற்படி தகவல்களை அவர் சுனாமி நலநிதிப் போட்டியின் பின்பு தெரிவித்தார் என்பது நோக்கத்தக்கது.

## முத்தரப்பு ஒரு நாள் போட்டி போட்டி அட்டவணை விபரம்

இலங்கையில் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத்தீவு அணிகள் பங்கேற்கும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 25 ஆம் திகதி தொடங்கி ஓகஸ்ட் ஏழாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

லீக் முறையில் நடைபெறும் இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் இரண்டு முறைமோதவேண்டும்.இது பகல்-இரவுப் போட்டியாக நடத்தப்படுகிறது. கொழும்பு மற்றும் தம்புள்ள நகரில் போட்டிகள் நடக்கின்றன. எந்தெந்த அணிகள் எந்தெந்த நாட்களில் மோதுகின்றன என்ற விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜுலை 25 இந்தியா-மேற்கிந்தியத்தீவு (தம்புள்ள), ஜுலை 27 இந்தியா-இலங்கை (தம்புள்ள), ஜுலை 29 இலங்கை-மேற்கிந்தியத்தீவு (தம்புள்ள), ஜுலை 31 இந்தியா-மேற்கிந்தியத்தீவு (தம்புள்ள), ஓகஸ்ட் மூன்று இந்தியா- இலங்கை (கொழும்பு), ஓகஸ்ட் ஐந்து இலங்கை-மேற்கிந்தியத்தீவு (கொழும்பு), ஓகஸ்ட்ஏழு இறுதிப்போட்டி (கொழும்பு).






# இரண்டாவது சுனாமி நலநிதி கிரிக்கெட் போட்டி லாறா அணியை வீழ்த்தியது பிளெமிங் அணி



2004 டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடத்தப்பட்ட உலக 11 பேர் அணிக்கும் எம்.சி.சி அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியில் எம்.சி.சி அணி 112 ஓட்டங்களால் வெற்றி பெற் றுள்ளது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற உலக 11 பேர் அணி எம்.சி.சி அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன்படி முதலில் ஆடிய எம்.சி.சி அதன் அணித்தலைவர் பிளெமிங் தென்னாபிரிக்க வீரர் ஜெக்கலிஸ் சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் அன்டிபிளவர் ஆகியோர் முறையே பெற்ற 62,62,55 என்ற ஓட்டங்களினுதவியாலும் இந்திய வீரர் லக்ஷ்மன், சிறிலங்காவின் சங்கக்கார ஆகியோர் பெற்ற 47, 46 என்ற ஓட்டங்களின் உதவியாலும் 50 ஓவர் முடிவில் ஏழு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 327 ஓட்டங்களைப் பெற்றது.





உலக 11 பேர் அணி சார்பில் பந்து வீசிய சமிந்த வாஸ், கிறிஸ் கெயான்ஸ், ஷேன்வோன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் நிட்னி ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.கண்காட்சிப்போட்டி என்பதால் லாறாவும் பந்து வீசியமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 328 என்ற பாரிய இலக்கு நோக்கி ஆடிய உலக 11 பேர் அணி மொத்தமாக பத்து ஓட்டம் எடுத்த நிலையில் ஷேவாக்கின் விக்கெட்டை இழந்தது. அவர் ஐந்து ஓட்டங்களுடன் போலக்கின் பந்தில் எல்.பி முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கை 66 ஆக இருக்கும்போது ஜெயசூரிய கும்ளேயின் பந்தில் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனையடுத்து ஆடிய கிரேம் ஸ்மித் லாறா இருவரும் ஓட்டங்களையும் விக்கெட்டுக்களையும் பாதுகாப்பான நிலையில் வைத்திருந்தபோதும் அனில் கும்ளே ஹர்பஜன்சிங், கிறிஸ்கெய்ல் ஆகியோரின் பந்துவீச்சுக் காணரமாக அடுத்தடுத்து ஆட்டமிழந்து சென்றனர். லாறா 27 பந்துகளில் 42 ஓட்டங்களையும், ஸ்மித் 61 பந்துகளில் 68 ஓட்டங்களையும் பெற்றனர். கும்ளே, ஹர்பஜன்,கெய்ல் மூவரும் தலா மூன்று விக்கெட்டினையும், போலக் ஒருவிக்கெட்டினையும் வீழ்த்தினர்.

# மான்யுனைட்டட் அணிக்கு கிறிஸ்ரியானோ மேலும் மூன்று வருடத்திற்கு ஒப்பந்தம்



மான்செஸ்ரர் யுனைட்டட் கால்பந்துக் கழகத்தில் இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ள போத்துக்கல்லின் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ றொனால்டோவை மேலும் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாக அவரது முகவரான ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடம் முடிவுற்றாலும் தொடர்ந்து அக்கழகத்திலேயே அவர் இருக்க விரும்புகின்றபோதிலும் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது அவசியமாகும். தற்போது 20 வயதாகும் அவர் 18 வயதில் ஒப்பந்தம் செய்துகொண்டார். அத்துடன் அவர் நிறையப் போட்டிகளில் பங்கேற்று பல வெற்றிகளையும் ஈட்டித்தந்தார் எனக் கூறும் மெண்டிஸ் கிரிஸ்ரியானோவுக்குத் தெளிவான குறிக்கோள் இருப்பதாகவும் அவருக்குப் பின்னால் வாடிக்கையாளராகக் கூறும் இத்தாலி,ஸ்பெயின் நாடுகளின் கழகங்களும் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய கால்பந்துப்போட்டி நாளை

அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் விளையாட்டுப்போட்டிகளில் இன்று நடைபெறவேண்டிய கால்பந்துப்போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# அமரர் பூஜிதா வெற்றிக்கிண்ண கால்பந்துப் போட்டி லக்கிஸ்ரார், உழவர்ஒன்றிய அணிகள் வெற்றி

அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த மென்பந்து,கால்பந்துப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் மூன்றாவது நாளாக நேற்று காலை நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அறிவன், ஸ்ரார் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங் களைப் பெற்றது.பதிலுக்கு ஆடிய அறிவன் அணி 10.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்று 70 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மற்றுமொரு போட்டியில் இளந்தென்றல் அணியை தோழர்கள் அணி 21 ஓட்டங்களால் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தோழர்கள் அணி 12.5.ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய இளந்தென்றல் 14.1ஓவரில் 64 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

இதேவேளை மாலை நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் லக்கிஸ்ரார் அணி பிரைக்சன் அணியை தண்ட உதைமூலம் 2-1 என்ற கோல் கணக்கிலும் உழவர் ஒன்றியம் அணி இளந்தளிர் அணியை 4-1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றன.

மேற்படி போட்டிகளில் கிரிக்கெட்டுக்கு மத்தியஸ்தர்களாக குமார், சுபானந்,ஆகியோரும் கால்பந்துக்கு சாரங்கன், சாரங்கன், பிரியங்கன், பார்த்தீபன் ஆகியோர் கடமையாற்றினர்.

# முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

நவக்கிரி எல்லாளன் முன்பள்ளி விளையாட்டுவிழா நாளை மறுதினம் வாணி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும். இவ் விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்கின்றார்.


☐ ☐ ☐

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வரும் முரளி, வில்வன் முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிறுவன இணைப்பாளர் கு.சுரேஸ் குமார் தலைமையில் வில்வன் முன்பள்ளி மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமானது.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தினை முல்லை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் காளி ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வை.குமரன் அவர்களின் ஆசியுரையுடன் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் சிறப்பாக முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சிக்கண்காட்சி விசேட நிகழ்வாக இடம்பெற்றது. இந் நிகழ்வில் பெருமளவான மக்கள், பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (20)

சிந்தனைக்கு



சுதந்திரப் போராட்டங்களாகவே மனிதவரலாறு அசைகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## காட்சி மாற்றம்!

இப்பத்தியை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் வேளையில் சிறிலங்கா அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் அன்றி ஏற்படும் நிலை உருவாகியிருக்கலாம். ஏனெனில் நேற்று நள்ளிரவுடன் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைக் கைவிட ஜே.வி.பி வழங்கிய காலக்கெடு முடிவடைந்திருக்கும்.

அதாவது பொதுக்கட்டமைப்பை நேற்று நள்ளிரவிற்குள் சனாதிபதி சந்திரிகா வாபஸ் பெறாத நிலையில் ஜே.வி.பி. கூறியபடியே நடந்து கொள்ளுமானால் நேற்று நடந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி இன்று பொது சன ஐக்கிய முன்னணியின் ஆட்சி என்பதாக மாறியிருக்கும். அதாவது ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதன் மூலம் இம் மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

இதன் விளைவானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாக மாற்றம் கண்டிருக்கும். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கையிலுள்ள நிறைவேற்று அதிகாரம் மட்டுமே அதனைத் தாங்கிப்பிடிக்க உதவுவதாக இருக்கும்.

இதேசமயம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கென ஜே.வி.பி எதிர்க்கட்சியிடம் ஆதரவுகோரும் வகையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கும். அதிலும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தும் சில சிரேஷ்ட தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து குறிப்பிடத்தக்கதான கீழ்மட்ட உறுப்பினர்களும் ஜே.வி.பியை ஆதரிப்பவர்கள் என்ற நம்பிக்கை அதற்குண்டு. இந்நிலையில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையில் முழு அளவில் ஈடுபட்டிருக்கும்.

இதேசமயம் சிறுபான்மை அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் சுதந்திரக்கட்சி ஜே.வி.பி க்குள் அதிருப்தி கொண்டவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியில் அதிருப்தி கொண்டவர்களையும் இணைத்து தமது அரசாங்கத்தைத் தக்கவைப்பதற்கான முழு அளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கும்.

அதாவது ஆட்சியைத் தக்கவைக்கும் வகையில் புதியதொரு சமன்பாட்டிற்கு வருவதற்கு சனாதிபதி சந்திரிகா புதிய கூட்டல், கழித்தல் கணக்குகளைத் தொடங்கியிருப்பார். ஆனால் இதில் சனாதிபதி சந்திரிகா எந்தளவிற்கு முன்னேற்றம் காண்பார் என்பதை தற்பொழுது கூறிவிடமுடியாது.

இதேசமயம் எதிர்க்கட்சியான, ஐ.தே.கட்சியியோ புதிய சமன்பாடுகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்படுவதற்கு விருப்பம் கொண்டதாக இருக்கமாட்டாது. சனாதிபதித் தேர்தலையோ அன்றிப் பொதுத்தேர்தலையோ நடத்துமாறு சனாதிபதி சந்திரிகாவை வற்புறுத்துவதாகவே அதன் அரசியற் செயற்பாடுகள் முனைப்புப்படுத்தப்பட்டதாக இருக்க வாய்ப்புண்டு.

மறுவளமாக ஜே.வி.பி தனது எச்சரிக்கை பிரகாரம் வெளியேறாது போனாலும் கூட அரசியலில் களத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டதாகவே இருக்கும் அதாவது பொதுக்கட்டமைப்பு குறித்த ஜே.வி.பி.யின் எதிர்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் அரசாங்கம் மீதான அதன் அழுத்தம் குறைவடைந்ததாகவும் மாற்றம் கண்டிருக்கும்.

இதன் காரணமாக ஜே.வி.பி குறித்து சனாதிபதி சந்திரிகா அச்சம் கொள்ளாது தீர்மானங்களை முன்னெடுக்கும் துணிவைப் பெற்றவராகிவிடுவார். அதுமட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருந்து கொண்டு ஜே.வி.பிக்கு ஆதரவு தெரிவிக்கும் குரல்கள் பெரும்பாலும் அடங்கிப் போனவையாகவே இருக்கும்.

ஆனால் நேற்றைய அரசியல் நிலவரத்தின்படி பெரும்பாலும் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறி இருப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் உண்டு. ஏனெனில் இறுதிவரை ஜே.வி.பி யின் உயர்மட்டத் தலைவர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது போனால் ஆட்சியைவிட்டு வெளியேறப்போவதாகவே எச்சரித்து வந்துள்ளனர். அது மட்டுமின்றி ஆட்சியைவிட்டு வெளியேறி புதிய முன்னணி ஒன்று அமைப்பது குறித்தும் அவர்கள் பேசத் தவறவில்லை.

இதேசமயம் அரசியலில் இருந்து ஜே.வி.பி வெளியேறுமானால் அரசாங்கத்திற்கும், சனாதிபதிக்கும் எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்துவதில் முனைப்பாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆயினும் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு ஜே.வி.பியும்,ஐ.தே.கட்சியும் கூட்டாக இணைந்து செயற்பட வாய்ப்பு இல்லாது விட்டாலும் அரசாங்கத்திற்கு எதிரான ஒருவரின் நடவடிக்கையை மற்றவர் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் கூடும்.

ஆகையினால் ஜே.வி.பி யின் கடந்த நள்ளிரவின் தீர்மானம் சிறிலங்கா அரசியல் களத்தில் புதிய திருப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் நிச்சயம் காரணமாகும் எனத் துணிந்து கூறலாம். ஜே.வி.பி நடந்து கொள்வது போன்றே தீர்மானம் மேற்கொள்ளுமானால் இன்று ஒரு புறத்தில் சிறுபான்மை அரசாங்கமும் – சனாதிபதியும் இருக்கையில் மறுபுறத்தில் கூட்டோ கூட்டணியோ இல்லாதுவிடினும் சனாதிபதி சந்திரிகாவைத் தீவிரமாக எதிர்க்கும் இருகட்சிகள் தீவிர முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

இதனை எதிர்கொள்ள சனாதிபதி சந்திரிகா நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தப்போவது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். அதாவது பாராளுமன்றம் கூடுவதை ஒத்திவைக்கவோ அன்றி பாராளுமன்றத்தைக் கலைக்கவோ அன்றி அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து எதிர்க்கட்சிகளின் அரசியற் செயற்பாடுகளை முடக்கக் கூடஅவர் முற்படலாம்.

# இலங்கை-இந்திய இராணுவ ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழ்நாட்டில் 28 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம்

இந்திய-சிறிலங்கா இராணுவ ஒப்பந்தத்தை எதிர்த்து எதிர்வரும் 28 ஆம் திகதி தமிழ்நாட்டின் சென்னையில் அனைத்து கட்சியினர், பங்கேற்கும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக சென்னையில் அனைத்துக் கட்சியினர், தமிழர் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம் தொடர்பாக சென்னை ஊடகவியலாளர்களுக்கு விடுதலைச்சிறுத்தைகள் இயக்கப் பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன் நேற்று அளித்த நேர்காணலில்:

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இணைந்த பொதுக் கட்டமைப்பை உருவாக்க சிறிலங்கா அரசு முன்வந்துள்ளது. இதை நாம் வரவேற்கிறோம்.

இதேவேளையில் இந்தப்பொதுக் கட்டமைப்புக்கு எதிராக இனவெறி தூண்டுகிற ஜே.வி.பி. மற்றும் பௌத்த பிக்குகளின் நடவடிக்கையை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்நிலையில் சிறிலங்கா அரசின் பாதுகாப்புக்காக இராணுவ ரீதியாக பயிற்சிகள் கொடுக்க, ஆயுதங்கள் வழங்க சிறிலங்கா அரசுடன் இந்திய அரசு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராகி வருகிறது.

தமிழினத்திற்கு எதிரான இந்த முயற்சியைக் கைவிடக்கோரி தமிழ் மக்களின் சார்பாக எதிர்ப்பைத் தெரிவிக்க தமிழ் உணர்வாளர்களின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

என்னுடைய தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா, ஓவியர் வீர சந்தானம் உள்ளிட்ட தமிழின உணர்வாளர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தில் இராணுவ ரீதியாக இந்திய அரசு, சிறிலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீண்ட நாட்களாக ஈழத்தமிழர் பிரச்சினையில் அக்கறை கொள்ளாத இந்திய அரசு சிறிலங்கா அரசுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே சுமுகமான தீர்வை நோர்வே முன்முயற்சி எடுத்து மேற்கொண்டபோதும் வேடிக்கை பார்த்துக்கொண்டு தமிழர்களைப் பெரிதுபடுத்தாமல் புறந்தள்ளி வந்தது.

இந்தவகையில் சிறிலங்கா அரசுக்கு உதவ இந்திய அரசு முன்வந்திருப்பது.தமிழர்களுக்கு எதிரானதே. ஆகவே இந்திய அரசுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையேயான இந்த இராணுவ ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இந்தக்கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 28ஆம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

என்னுடைய தலைமையில் நடைபெறும் இந்தப் போராட்டத்திற்கு தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தலைவர் மருத்துவர் சேதுராமன், தமிழ்த் தேசியக்கட்சித் தலைவர் தணிக்கையாளர் இள முருகன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்து முழுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர்.

சென்னை சேப்பாக்கம் தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்லம் எதிரே நடைபெறும் இந்த உண்ணாநிலைப்போராட்டத்தை திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக துணைப்பொதுச்செயலாளர் செஞ்சி இராமச்சந்திரன் ஆகியோர் தொடக்கி வைப்பார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் உண்ணாநிலைப்போராட்டத்தை முடித்து வைப்பார்.

இப்போராட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தலைவர் கௌத்தூர் தா. செ. மணி, தமிழ்த் தேசப்பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் பெ.மணியரசன், தமிழ் தமிழர் இயக்கத்தலைவர் தியாகு, தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் நா.அருணாச்சலம் உள்ளிட்ட தமிழ் இன உணர்வாளர்கள் பலரும் பங்கேற்று முழுநாள் சிறப்புரை ஆற்றுவார்கள்

போராட்டத்தின் முடிவில் தமிழ்நாட்டு ஆளுநர் பர்னாலாவைச் சந்தித்து, இந்த ஒப்பந்தத்தைக் கைவிட வலியுறுத்தும் கோரிக்கை மனு அளிக்கப்படவுள்ளது என்றார் அவர்.

# பௌத்த குருமார் போராட்டத்தை நிறுத்தி பொதுக்கட்டமைப்புக்கு உதவ வேண்டும்

### -மட்டு.அம்பாறை மாவட்ட சங்கநாயக்கர்

(மட்டக்களப்பு)

போராட்டம் மேற்கொள்ளும் பௌத்த மதகுருக்கள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு உதவ வேண்டும் வடக்கு கிழக்குக்கு குறித்த பிக்குமார் வந்து பார்ப்பார்களாக இருந்தால் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் யாவற்றையும் தெரிந்துக்கொள்ள முடியும் எனவே பௌத்த மதகுருமார் தமது போராட்டங்களை நிறுத்தி பொதுக் கட்டமைப்புக்கு, இடம்தரவேண்டுமென மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சங்கநாயக்கர் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் பௌத்த தேரர்கள் காட்டிவரும் எதிர்ப்புகள் விமர்சனத்துக்குரியவை. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவது அவசியம் . நாட்டில் சனாதிபதி கொண்டு வரவிருக்கும் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதுவும் புத்திஜீவிகளாக கருதப்படுகின்ற பௌத்த பிக்குகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதிகளில் அமர்ந்து போராட்டங்கள் நடத்துகின்றனர். ஆழிப்பேரலைகாரணமாக நாட்டின் பல பகுதிகளில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உட்பட்ட வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.இதனை நாளாந்தம் கிராமம் கிராமமாகச் சென்றுவரும்போது தெரிந்து கொள்ள முடியும். இதன்காரணமாக இந்தப் பிரதேசங்களைப் புனரமைப்பதற்கு ஏதாவது திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும். அதற்கு பொதுக்கட்டமைப்பு அவசியமானதாகும். இந்த முயற்சியானது நாட்டின் சமாதானத்திற்கு ஒரு நல்ல வழியாகவும் அமையும். இதனை விடுத்து ஜே.வி.பி தேசிய பிக்கு முன்னணி மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகியவற்றின் பிரதி நிதிகள் தமது எதிர்கால அரசியல் நலன் கருதி மாத்திரம் செயற் படுகிறார்கள். அவர்கள் நாட்டின் நலனை முன்னிலைப் படுத்த வில்லை. இந்தச் செயல்கள் யாவும் நாட்டை.செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### -சிவராம் படுகொலை சந்தேகநபரான பீற்றரை-

# அரசில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சி வாடகைக்கு அமர்த்தியதாகச் சந்தேகம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சி ஒன்று ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான புளொட் அமைப்பின் இராணுவ பிரிவுத் தலைவர் பீற்றர் என்பவரை வாடகைக்கு அமர்த்தியதாக சந்தேகிக்கப்படுகின்றது.

பீற்றர் மூலம் சிவராமைப் படுகொலை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட குறிப்பிட்ட அரசியல் கட்சி பீற்றருக்கு பெருந்தொகைப் பணத்தை வழங்கியதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில் சிவராமின் படுகொலைக்கும், தமது புளொட் அமைப்பிற்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்று பீற்றர் வாக்குமூலம் அளித்திருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.ஆனால் குறிப்பிட்ட அரசியல் கட்சி சிவராமைப் படுகொலைசெய்தமையின் நோக்கம் என்ன இதன் பின்னணியில் வேறு ஏதாவது அந்நிய சக்திகளின் தலையீடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளது.குறிப்பிட்ட அரசியல் கட்சி அயல் நாட்டுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதால் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தக் கொலையினை பீற்றர் மூலம் மேற்கொண்டிருக்கலாம் என்றும் ஊகங்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸ் தரப்பால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின்போது மேலும் பலர் கைதுசெய்யப்படலாம் என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான அறுவடை விழா



(கிளிநொச்சி)

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தின் 2005ஆம் ஆண்டிற்கான அறுவடைவிழா நேற்றுக் காலை 9.00 மணியளவில் குறிஞ்சாததீவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் அந்நிறுவனப் பொறுப்பாளர் புஸ்பராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியலதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் துறைசார் அலுவலர்கள், பணியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சம்பிரதாய பூர்வமாக உப்பு அறுவடையினை ஆரம்பித்து வைத்தார்.அதனைத் தொடர்ந்து அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர் அதனைத் தொடர்ந்து இவ்வாண்டிற்கான உப்பு அறுவடை ஆரம்பமானது.

# கல்முனை சிற்றூர்திமையத்தில் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி

(கல்முனை)

கல்முனையில் தனியார் சிற்றூர்திமையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சிற்றூர்திமையத்தின் நேரக்கணிப்பாளர் கலில் என்பவரும் அவரின் உதவியாளரான ரவீந்திரன் என்பவருமே பலியானவர்களாவர்.

எனினும் இந்தத்துப்பாக்கிச் சூட்டுக்கு யார் பொறுப்பு என இதுவரை தெரியவரவில்லை. (32)

# ஒரு வாரத்துள் கைச்சாத்தாகலாம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு ஒருவாரகாலத்துக்குள் இடம்பெறலாம் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான திகதியும் நிர்ணயிககப்பட்டுவிட்டதாகவும் கொழும்புத தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மக்களுக்கு ஏற்படும் பாதகங்களுக்கு ஜே.வி.பியே பொறுப்பேற்க வேண்டும்

## சனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவு காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் பாதகங்களுக்கு ஜே.வி.பியே பொறுப்பேற்கவேண்டுமென சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி யின் செயலர் ரில்வின் சில்வாவுக்கு நேற்று மாலை அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாக இன்னும் எந்த ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பொதுமக்களுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் இது தொடர்பில் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மகாநாயக்கர்களின் அனுமதியின்றி இறுதி முடிவு எடுப்பதில்லை என இணங்கப்பட்டுள்ளது.இந்த நிலையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக எவ்வித தகவல்களும் தெரியாத போது அது தொடர்பில் மக்களை ஆவேசப்படுத்துவது ஏற்கக்கூடிய விடயம் அல்ல.

கடந்த 20 வருட யுத்தம் காரணமாக இடம்பெற்றுவரும் அழிவுகளை நிறுத்தி சமாதானத் தீர்வு காண்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவது அவசியமாகும்.இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித நிபந்தனையும் இன்றி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வந்தமையானது அரசாங்கத்துக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளார். (32)

# ஆரையம்பதியில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் கொல்லப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதி முருகன் கோயிலடியில் நேற்று மாலை 5.50 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். கொல்லப்பட்ட நபர் ஆரையம்பதி கோவில்குளம பகுதியைச் சேர்ந்த பொன்னையா சந்திரபவன் (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனினும் கொலைக்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

# புத்தூர் கொலைச்சம்பவ விவகாரம்; இருவருக்கு மரண தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் கடந்த 2001 ஆம் ஆண்டு ஆனிமாதம் இடம்பெற்ற கொலைச்சம்பவம் ஒன்றுடன் தொடர்புள்ள இரண்டு பேருக்கு யாழ். மேல் நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஆனிமாதம் புத்தூரைச் சேர்ந்த இராஜரட்ணம் உதயகுமார் என்பவர் கத்தியால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் யாழ். மேல் நீதிமன்றத்தில் செய்யப்பட்ட வழக்குத்தாக்கலில் அவ்வூரைச் சேர்ந்த பூதத்தம்பி முருகநாதன, பூதத்தம்பி மகேந்திரன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இக்கொலைச்சம்பவம் தொடர்பாக கடந்த எட்டாம் திகதியிலிருந்து யாழ். மேல் நீதிமன்றத்தில் "யூரி" சபைமுறையில் நடத்தப்பட்ட விசாரணையின் மூலம் கிடைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இவ் இருவர் மீதா[illegible] கொலைக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது.

கடந்த எட்டாம் திகதி தொடக்கம் நேற்றுவரை நடைபெற்ற இவ்யூரிசபை முறையிலான ஆறு நாள் விசாரணைக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின்படி நேற்று மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி சி. வரதராஜா குற்றவாளிகள் இருவருக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்ததுடன் இவ்விருவருக்கும் சனாதிபதியால் தீர்மானிக்கப்படும் ஒருதினத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்படும் எனவும் அறிவித்தார். (33)

# நாகவிகாரையில் சட்ட விரோத கட்டடம் அமைப்பு; உடன்நிறுத்துமாறு ஆணையாளர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள நாகவிகாரை வளாகத்தினுள் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டு வந்த பௌத்தவழிபாட்டுத்தலத்தின் கட்டட நிர்மாணப்பணிகளை உடன் நிறுத்துமாறு யாழ் மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா உத்தரவிட்டுள்ளார்.

இவ் உத்தரவை மீறி மேற்படி கட்டடத்தை நிர்மாணிக்கும் பணிகள் தொடருமானால் அதனை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள மேற்படி நாகவிகாரை வளாகத்துள் யாழ். மாநகர சபையின் அனுமதிபெறாது புதிய ஒரு வழிபாட்டுத் தலத்தை நிர்மாணிக்கும் பணிகளை பௌத்தபிக்குகள் மேற்கொண்டுள்ளனர்.

இது யாழ். மாநகரசபையின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பானதாகவும், நகர விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாகவும் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டு வந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து நேற்றையதினம் ஆரியகுளம் சந்தியில் இருக்கும் நாகவிகாரைக்குச் சென்று மேற்படி கட்டடத்தை யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

இதன் பின்னர் யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி நாகரட்ண தேரரை நேரில் சந்தித்த யாழ். மாநகர ஆணையாளர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.(33)

# தலதாமாளிகையில் புத்தர்தந்த வழிபாட்டிற்கு சந்திரிகாவையும், ரணிலையும் அனுமதிக்கக் கூடாது!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் ஆகியோரைத் தலதாமாளிகை புனித ஸ்தலத்திலுள்ள புனிதசின்னமான புத்தர்தந்த வழிபாட்டிற்கு அனுமதிக்கக்கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

மகரகம இளைஞர் மைய மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரான எல்ல குணவன்ச தேரர் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவது தொடர்பாக பலமுறை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வலியுறுத்திய பின்னரும் அவர் கேட்பதாகத் தெரியவில்லை.

மகாநாயக்கர்களின் உத்தரவை அவர் மதிக்கவில்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலையும் மாளிகையிலுள்ள தலதா புத்தர்புனித தந்த வழிபாட்டுக்கு மகாநாயககர்கள் தடை விதிக்க வேண்டும் என்றார் அவர்.

### சாவகச்சேரி...

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது . (33)

### கேணல்...

திக்கொடுப்பதற்கு கடந்த சில வாரங்களாக சிறிலங்கா அரசு இழுத்தடிப்புச் செய்து வந்துள்ளது. இதை அடுத்து விடுதலைப்புலிகளின் தளபதிகளின் கிழக்கு பயணத்துக்கு சிறிலங்கா அரசு ஏற்பாடுகளை மேற்கொள்ளாவிடின் புலிகள் சுய பாதுகாப்புடன் வான்,கடல், தரை வழிப்பயணங்களை மேற்கொள்ள நேரிடும் என்று விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதை அடுத்து கண்காணிப்புக் குழுவினருக்கும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கிணங்க இந்தப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டது.

### உண்ணாவிரதம்...

சாலையில் அனுமதித்திருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளபோதிலும், அமில தேரரினதும், பிக்குமாரினதும் விருப்பத்துக்கு மாறாக பொலிசாரும், சனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவினரும் அமில தேரரை பலவந்த மாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருப்பதாக தேசிய பிக்குகள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.நேற்றுப் பிற்பகல் முதலே, கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் ஏராளமான பொலிசாரும், அதிரடிப்படையினரும் பாதுகாப்புக் [illegible]யில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

தேரரின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவுதெரிவித்து பொதுமக்கள் உண்ணாவிரத மேடையைச் சுற்றி குழுமி நின்றிருந்தனர்.

பெருமளவான இளைஞர்கள் உண்ணாவிரத மேடையைச் சுற்றி தமது கைகளைக் கோர்த்தவண்ணம் பாதுகாப்பு வழங்கிவந்ததையும் காணக்கூடியதாகவும் இருந்தது.

எனினும், இவர்களது இந்த எதிர்ப்புக்களையும் மீறி உண்ணாவிரதம் அனுஷடித்துவரும் அமில தேரரை பொலிசாரும், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரும் அங்கிருந்து அப்புறப்படுத் தியுள்ளனர்.(32)

### தமிழீழ...

அத்துடன் தமிழீழ நீதிமன்ற நீதியாளர்களுடன் தனது நீதித்துறை அனுபவங்கள் பற்றி பகிர்ந்துகொண்டதுடன் நீதியாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியும் ஆலோசனைகளை வழங்கியிருந்தார்.

இறுதியில் தமிழீழ நீதிநிர்வாகத்துறையின் செயற்பாடுகள் தொடர்பாக அவர் கூறுகையில், வழக்குகளைக் குற்றவியல், குடியியல் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவது பாராட்டுக்குரியது எனவும் தெரிவித்தார். (லோ,தீ)

### சனாதிபதி...

கோரி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் கேட்டுக்கொண்டபோது ஜே.வி.பி அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

அதேவேளை நேற்றிரவு ரூபவாகினி தொலைக்காட்சியில் அமைச்சரின் சரத் அமுனுகம,டிலான் பெரேரா, மைத்திரிபாலசிறிசேன ஆகியோர் ஜே.வி.பியின் காலக்கெடுவுக்கு ஒரு மணிநேரமே இருப்பதாகவும், அதற்குள்ளும் ஜே.வி.பி தனது முடிவை மாற்றலாம் எனவும் தெரிவித்திருந்தனர். எனினும் நள்ளிரவு வரை ஜே.வி.பி தனது முடிவில் மாற்றம் எதனையும் செய்யவில்லை.

அதேவேளை சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி விதித்த நிபந்தனையையும் நேற்று நள்ளிரவு வரை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந் நிலையில் ஜே.வி.பி இன்று முற்பகல் பத்து மணியளவில் ஓர் ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டவுள்ளதாகவும் அதில் தனது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது